# தமிழ்ப்பாடசாலை

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

# பாசல்

## சுவிஸ்



"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

**பாசல் தமிழ்ப் பாடசாலை**
**7வது ஆண்டு மலர் (27.09.98)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RMC PARADIES

**அன்பான உபசரிப்பு...**
**தரமான பொருட்கள்...**
**நியாயமான விலை...**
**என்றதும் உங்கள்**
**ஞாபகத்திற்கு வருவது**

# ராஜன் கடை

(பாசல் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்)



**துரிதமாக இலங்கைக்கு பணம் அனுப்பவோ புதிய மரக்கறி மீன் வகைகளை தினமும் வாங்கவோ, கண்கவர் டிசைன்களில் 22 கரட் நகைகள் கொள்முதல் செய்யவோ, அழகிய ரெடிமேட் உடுப்புக்களை பெறவோ... பாசலில் உங்கள் நம்பிக்கையான ஸ்தாபனம்**

## RMC PRADIES

**Tel & Fax: 061/2712207**

**Natel: 077 740785**

**தினமும் எங்கள் ஸ்தாபனம் காலை 9 மணியிலிருந்து மாலை 9 மணிவரை திறந்திருக்கும்.**

**Bahnhof, Kuechen gasse 9**
**4053 Basel.**
**Swiss**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாசல் தமிழ்ப் பாடசாலை
# 7 வது ஆண்டு மலர்

***TAMILISCHE SCHULE***
***Sandgruben Schulhaus***
***Schwarzwaldallee, 161***
***4058 Basel (CH)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசல் மாநகரில் மக்கள் மனங்கவர்ந்த

ஒரே ஸ்தாபனம்!

**உங்கள் தேவையறிந்து சேவையாற்றுவது**

# ஆசியன்
# அருணா சென்ரர்



**உடன் மரக்கறி, மீன் வேண்டுமா?**
**அறுசுவையான மதிய, இரவு விநியோகஸ்தர்களைத் தேடுகின்றீர்களா?**
**இந்திய, இலங்கை பத்திரிகை சஞ்சிகைகளை வாங்கிப் படிக்க விரும்புகிறீர்களா?**
**இலங்கைக்கு பணம் அனுப்ப விரும்புகிறீர்களா?**
**எமது ஸ்தாபனம் உங்கள் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய காத்திருக்கின்றது!**
**(இலங்கைக்கு பணம் அனுப்புவர்களுக்கு விஷேட சலுகைகள் உண்டு)**
**இன்றே நாடுங்கள்.**

எமது
ஸ்தாபனம்
திறந்திருக்கும்
நேரம்:
திங்கள்-சனி: 9.00 - 22.00
ஞாயிறு 14.00 - 22.00

**உரிமையாளர்:**
**செல்லத்துரை தர்மராஜா**
Spalenring 17
4055 Basel
Swiss
Tel & Fax: 061/ 3817888
Natel: 079 4235059



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியில் காதல்..

இன்றைய காலகட்டத்தில், காதல் என்பது இளவட்டங்களிடையே நன்றாகத்தான் தொற்றிக் கொண்டிருக்கின்றது. இந்தக் காதல் அலையில் அடிபட்டு, இப்பொழுது வெளிவரும் திரைப்படங்கள் எல்லாம், காதலே நிம்மதி, காதலுக்கு மரியாதை என்று காதலோடு ஒட்டிய பெயர்களில் வெளிவர ஆரம்பித்துள்ளன.

இந்தக் காதல் என்பது, ஒரு ஆண் இன்னொரு பெண்ணை விரும்பும்போது மாத்திரம் ஏற்படும் உணர்வு என்று கொள்வதற்கில்லை. வாய்க்கு ருசியாக, வகை வகையாகப் புசிக்க ஆசைப்படுபவருக்கு, உணவின்மீது காதல் வந்து விடுகின்றது. புத்தகங்களில் பிரியம் வைத்திருப்பவர், நூல்களின் காதலராகி விடுகின்றார். வேறு சிலருக்கு மதுவில் உள்ள மோகம், அதன்மீது தீராக் காதலை உண்டுபண்ணி விடுகின்றது.

இந்த வரிசையில் வருவதுதான், ஒருவருக்கு மொழிமீது ஏற்படும் காதல். குறிப்பாக ஒருவருக்கு தன் தாய்மொழி மீது காதல் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. சிறு வயதிலேயே மொழியின் மோகம் பிள்ளைகளுக்குத் தொற்றிவிடக் காரணியாக இருப்பவர்கள் பெற்றோர்களதாம்! இவர்களது ஆரம்பகால ஊக்குவிப்பே , மொழிகற்கும் ஆர்வத்தைப் பிள்ளைகளுக்கு ஊட்டுகின்றது.

தாய்மொழியல்லாத பிறிதொரு மொழியைப் பேசும் இன்னொரு நாட்டில் வாழும் பிள்ளைகளுக்கு தாய்மொழி மீது ஆர்வம் ஏற்படுத்தவேண்டியது மிகமிக அவசியமாகின்றது. பல வெளிநாட்டு அமைப்புகளின் அனுசரணையுடன் , தமிழ்ப் பாடசாலைகள் பல இயங்கி வருவது, பிள்ளைகளின் அதிஸ்டந்தான். தத்தம் பகுதிகளில் இயங்கும் பாடசாலை வகுப்புகளுக்கு தமது பிள்ளைகளை ஒழுங்காக அனுப்பி, தமிழ்மொழி மீது பிள்ளைகளுக்குத் தணியாத காதல் ஏற்படுத்த வேண்டியது, பெற்றோர்களின் தலையாய கடமையாகின்றது.

சுவிஸ் பாசல் நகரில், கடந்த 7 ஆண்டுகளாக இயங்கிவரும் பாசல் தமிழ்ப்பாடசாலையின் ஏழாவது ஆண்டு நிறைவை ஒட்டியே இந்த மலர் பூத்திருக்கின்றது. இம் மலரின் ஆசிரியராகக்கடமையாற்றும் பணியை ஒப்புவித்து என்னைக் கௌரவித்தமைக்கு பாடசாலை அதிபர், சக ஆசிரியர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், பிள்ளைகளின் பெற்றோர்கள் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்குள்ள தமிழ் சிறார்கள் தம் தாய்மொழியைக் கற்க உதவிவரும் இப்பாடசாலையின் அரிய தொண்டு, சிறப்புடன் தொடர என் வாழ்த்துக்கள்.

**ஏ.ஜே. ஞானேந்திரன்**
**மலர் ஆசிரியர்**

"ஒரு புத்தகம், - அதை எழுதியவர்களின் இதயத்திலிருந்து
பிறப்பதாக இருந்தால், நிச்சயமாக அது மற்றவர்களின் இதயத்தைக் கவரும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

சுவிஸ் பாசல் நகரில், வெளிநாட்டவர்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு பலவிதமான உதவிகளைச் செய்துவரும் Freiplatz aktion அமைப்பின் அனுசரணையுடன் தமிழ் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுள்ள ஆசிரியர்களும் பெற்றோரும் சேர்ந்து ஆரம்பித்ததுதான் இந்த பாசல் தமிழ்ப் பாடசாலையாகும். ஐரோப்பிய நாடொன்றில் அகதிகளாக வாழ்கின்ற நாம், நமது பிள்ளைகளுக்கு தாய்மொழிக் கல்வியும், நமது பாரம்பரிய கலாச்சாரமும் வழங்கப்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் இப்படியான பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கும்போது பலவிதமான சிரமங்களை எதிர்பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆரம்பம் என்பது அவ்வளவு இலகுவான ஒன்றல்ல. தமிழ் வகுப்புகளை நடாத்தவதற்கு நமக்கு கிடைத்த பாடசாலை Sandgruben Schulhaus என்று அழைக்கப்படும் இங்குள்ள ஒரு பாடசாலையாகும். Container என்று அழைக்கப்படும் பெட்டி வகுப்புகளே ஆரம்பத்தில் நமக்கு வகுப்புகளை நடாத்தக் கிடைத்த இடமாகும். (இதை நான் இங்கு ஒரு குறையாகக் கூறவில்லை)

பாசல் தமிழ்பாடசாலை 29-01-1992 இல் 31 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பம் என்பது அவ்வளவு இலகுவானதல்ல என்று முன்பே குறிப்பிட்டிருந்தேன். ஐரோப்பிய நாடுகளில் அதுவும் சுவிஸ் நாட்டில் பணத்தையும் உழைப்பையும் பெரிதாகக் கருதும் நம்மவர்க்கு மத்தியில் மூன்று ஆசிரியர்கள் இலவசமாகப் படிப்பிக்க வந்தது பெரிய விடயமாகும். பாடசாலை நடைபெறும் நாளும் நேரமும் புதன்கிழமை பிற்பகல் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும். ஆதலால் இங்கே படிப்பிக்க வருபவர்கள் ஒன்றில் வேலையில்லாதவர்களாக இருக்க வேண்டும். அல்லது இந்த நேரத்தில் இடைவேளை (Pause) கிடைக்கும் வேலையில் இருப்பவர்களாக இருக்க வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல பணத்தையே பெரிதாக நினைக்கும் நம்மவர்கள் நேரம் கிடைத்தாலும் இலவசமாகப் படிப்பிக்க முன்வரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அப்படியிருந்தும் முதலில் இலவசமாகப் படிப்பிக்க முன்வந்த ஆசிரியர்களைக் கௌரவப்படுத்த விரும்புகின்றேன். என்னுடன் இணைந்து பணியாற்றியவர்கள் திருமதிகள் ஈஸ்வரி உருத்திரமூர்த்தியும் சுகுணா விவேகானந்தனுமாவார்கள். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட இரு மாத காலங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடியதோடு புதிதாக ஆசிரியர் திரு பொ.நாகேஸ்வரனும் எம்முடன் இணைந்து கொண்டார்.

தொடர்ந்து மாணவாகளின் தொகை அதிகரித்து வந்தாலும், 1994ம் ஆண்டு இறுதிவரை மேலதிக ஆசிரியர்கள் எவருமே இணைந்து கொள்ளவில்லை. ஆசிரியர்களின் திறமையான சேவையும் மாணவாகளின் ஒழுங்கான வரவும் , பெட்டி வகுப்புகளிலிருந்து சாதாரண வுகுப்புகளை எமக்கு சுவிஸ் பாடசாலை நிர்வாகத்தினர் மாற்றித்தர வைத்தன. இந்தப் பாடசாலையில் ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் கல்வி பயின்ற செல்வி ஜனனி மகேந்திரன் (இலங்கையில் ஆண்டு 10 வரை பயின்றவர்) துணை ஆசிரியையாக 1995ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து ஏற்கனவே சேவையிலுள்ள நான்கு ஆசிரியர்களுடன் இணைந்து சேவைசெய்தார். தவிர்க்க முடியாத காரணங்களினால் தனது நீண்டகாலச் சேவையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஈஸ்வரி உருத்திரமூர்த்தி 1995ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நிறுத்திக் கொண்டார். ஏனினும் திரமதி கிருஷ்ணபவானி சிறீதரன் 1995 ஆரம்பத்திலிருந்து ஆசிரியையாக இணைந்து கொண்டார். அதைத் தொடர்ந்து திருமதிகள் நந்தினி அரசரத்தினம், வத்சலகுமாரி சந்திரகுமார் ஆகிய இருவரும் 1995ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து 1995ம் ஆணடு இறுதிவரை கடமையாற்றினார்கள். தொடர்ந்து 1996ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து திருமதிகள் மாலதி குகதாஸ், றிச்சாட் ஜோன்சன் அகுஸ்ரின் பிறேமலோஜினி ஆகிய இருவரும் புதிய ஆசிரியைகளாக இணைந்து கொண்டனர். தவிர்க்க முடியாத காரணங்களினால் செல்வி ஜனனி மகேந்திரன் தனது சேவையை முடித்துக் கொண்டார். காலம் உருண்டது. பலரும் தமிழ் பாடசாலைபற்றி அறியத் தொடங்கினர். வருடாவருடம் நடைபெற்று வந்த கலைவாணி விழாவும் இதற்கு ஒரு காரணமாகும். மாணவர்களின் வருகையும் கூடியது. 1996ம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து திருமதிகள் நந்தினி மனோரதன், பத்மாஜன தேவி தர்மராஜா ஆகிய இருவரும் ஆசிரியைகளாக இணைந்து கொண்டனர். 1996 ம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து திருமதி மாலதி குகதாஸ், மிக நீண்டகாலமாகக் கடமையாற்றிய திருமதி சுகுணா விவேகானந்தன் ஆகிய இருவரும் தவிர்க்க முடியாத காரணங்களால் தமது சேவையை முடித்துக் கொண்டனர். 1996ம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து திருமதி யோகேஸ்வரி ஜெயக்குமார் ஆசிரியையாக இணைந்து கொண்டார்.

1997ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து பாசல் தமிழ் பாடசாலையில் கடந்த 5 வருடங்களாகக் கல்வி பயின்ற செல்வன் பரிமளநாதன் மயூரன் பாடசாலை உதவியாளராகக் கடமையாற்றுகின்றார். அதேவேளை திருமதி பத்மினி இரவீந்திரன் ஆசிரியையாக இணைந்து கொண்டார். 1997ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து திருமதி றிச்சட் பிரேமலோஜினி தவிர்க்க முடியாத காரணங்களினால் தனது சேவையை முடித்தக் கொண்டார். அவருக்குப் பதிலாக நமது பாடசாலையின் ஆரம்பகால மாணவி செல்வி யூடித் புஸ்பாகரன் (இலங்கையில் ஆண்டு 10 வரை பயின்றவர்.) ஆசிரியையாக இணைந்து கொண்டார். மாணவர்களின் எண்ணிக்கை மேலும் கூடியது. 1997ம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து திரு ஏ.ஜே.ஞானேந்திரன் ஆசிரியராக இணைந்து கொண்டார். 1997ம்ஆண்டின் இறுதிப் பகுதியில் செல்வி யூடித் புஸ்பாகரன் தனது சேவையை முடித்துக் கொண்டார்.

உதவி ஆசிரியைகளாகக் கடமையாற்றியவர்களையும், கடமையில் இருப்பவர்களையும் பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதன் அடிப்படையில் 1995ம் அண்டின் ஆரம்பத்திலிருந்து நடுப்பகுதி வரைக்கும் திருமதி இந்திரா நந்தகுமார் ஆசிரியையாகக் கடமையாற்றினார். அத்துடன் 1997ம் ஆண்டிலிருந்து திருமதி ச.மனோகரராசா உதவி ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார். 1998ம் ஆண்டிலிருந்து திருமதிகள் ஆனந்தரான், மனோகரி சுப்ரமணியம் ஆகியோரும் உதவி ஆசிரியைகளாகக் கடமையாற்றுகின்றார்கள்.

## <u>1998ம் ஆண்டு பாசல், தமிழ்ப் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் விபரம்.</u>

1. திரு பொ.நாகேஸ்வரன்
2. திருமிதி கிருஷ்ணபவானி சிறீதரன்
3. திருமதி நந்தினி மனோரதன்
4. திருமதி பத்மாஜனதேவி தர்மராசா
5. திருமதி யோகேஸ்வரி ஜெயக்குமார்
6. திருமதி பத்மினி இரவீந்திரன்
7. திரு ஏ.ஜே.ஞானேந்திரன்
8. திருமதி.சந்திரலீலா மனோகரராஜா (உதவி ஆசிரியை)
9. திருமதி நந்தினி ஆனந்தரான் (உதவி ஆசிரியை)
10. திருமதி மனோகரி சுப்ரமணியம் (உதவி ஆசிரியை)

பாசல் தமிழ் பாடசாலை உதவியாளராக செல்வன் பரிமளநாதன் மயூரன்

<u>வகுப்புரீதியாக மாணவர்களின் எண்ணிக்கை</u>

| | |
|---|---|
| பாலர்வகுப்பு ஆரம்பப் பிரிவு | 15 |
| பாலர்வகுப்பு கீழ்ப்பிரிவு | 14 |

நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! நீ நாட்டிற்கு என்ன செய்தாய் எனக் கேள். -ஜோன் கென்னடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பாலர்வகுப்பு மேற்பிரிவு | 22 |
| ஆண்டு 1 | 25 |
| ஆண்டு 2 | 17 |
| ஆண்டு 3 | 15 |
| ஆண்டு 4 | 12 |

அத்துடன் பாசல் , தமிழ்ப்பாடசாலைக்கான FPA இன் பிரதிநிதியாக பாடசாலை ஆரம்பிக் கப்பட்டதிலிருந்து 1995ம் ஆண்டு இறுதிவரை திரு கந்தையா வினாசித்தம்பியும் 1996,97ம் ஆண்டுகளில் திரு இராசையா மகேந்திரனும் கடமையாற்றினார்கள். 1998ம் ஆண்டிலிருந்து திரு இந்திரன் ஆனந்தராசன் கடமையாற்றுகின்றார்.
பாசல் தமிழ்ப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை நடைபெற்ற அனைத்தையும் ஓரளவு சுருக்கமாக இங்கே கூறியுள்ளேன். இன்னும் பல ஆண்டுகள் இப்பாடசாலை மேலும் பல நூறு மாணவர்களுடன் இயங்கவேண்டுமென நான் இங்கு வாழ்த்தப் போவ தில்லை. இப்பாடசாலை உருவாக்கப்பட்டதன் நோக்கம் நமது தாயகத்தில் இருக்க இட மின்றி, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி தவித்த நமது மக்கள் அகதிகளாக்க ப்பட்டு சிதறி ஓடிய நிலையிலும், நமது தாய்மொழியை, அதனுடைய கலாச்சாரத்தை எமது எதிர்கால சந்ததி மறந்துவிடக்கூடாது என்பதேயாகும். நாம் வேற்றுநாட்டில் இருக்கும்வரை தமிழைப் படித்து தமிழராக வாழவேண்டும் என்பதற்காகவே இப் பாட சாலை உருவாக்கப்பட்டது.
எனவே நாம் நம் தாயகத்திற்கு திரும்பும் காலம்வரை, இப்பாடசாலை இனிதே நமது எதிர்ககால சந்ததியினருக்கு தமிழ் கல்வி புகட்ட வேண்டும் என்பதே என் தீராத விருப்பமாகும்.


ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தான் செயின்.

ந. தயாபரன் E.E.Tech.(Cey.& CH)
அதிபர், பாசல் தமிழ் பாடசாலை



எத்தனை
தூண்கள்...?

உங்களுக்கு
கண் பார்வை
எப்படி...?
இங்கே பரிசோதித்துப்
பாருங்களேன்...



பூச்சி உள்ளேயா? வெளியேயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Freiplatzaktion
für Asylsuchende Region Basel

## Tamil-Schule

Wenn Kinder aus dem Ausland Deutsch lernen wollen, müssen sie zuerst ihre eigene Sprache richtig können. Erst wer seine Muttersprache beherrscht, kann richtig Deutsch lernen. Durch die Förderung der Kinder in ihrer Muttersprache wird ihnen eine Grundlage geschaffen für das erlernen weiterer Sprachen. Der Unterricht fördert zusätzlich die Verwurzelung in der eigenen Kultur, stärkt die eigene Persönlichkeit und die Integrationsfähigkeit im vorerst fremden Land.

Diese Überlegungen wurden im Januar 1992 von drei, ein paar Monate später vier tamilischen LehrerInnen, einigen tamilischen Eltern und mit der Unterstützung der Freiplatzaktion in die Tat umgesetzt. Es wurde ein tamilisches Schulprojekt ins Leben gerufen. Sie begannen in 2 Containern, die zum Sandgruben-Schulhaus in Basel gehörten, mit 31 SchülerInnen den Unterricht.

In der Zwischenzeit sind es acht LehrerInnen die über hundert SchülerInnen jeden Mittwoch-Nachmittag im Sandgruben-Schulhaus unterrichten. Die Eltern werden von den Lehrkräften aktiv ins Schulgeschehen miteinbezogen. Es finden regelmässig Elternabende mit den Lehrkräften und Informationsgespräche mit der Freiplatzaktion statt.

Trotz der Bildung einer weiteren Tamilschule im Frühjahr 1997 hat die SchülerInnenzahl weiter zugenommen. Die Eltern sind froh, dass sie ihren Kindern einen politisch neutralen Unterricht in Sprache und Kultur anbieten können.

Die Freiplatzaktion freut es sehr, dass in unserer Region Tamilen und Tamilinnen leben, die ihre Tradition und Geschichte an ihre Kinder weitergeben und ihre Kunst und Kultur erhalten wollen. Sie haben in dieser wertvollen Arbeit unsere volle Unterstützung, denn eine gute Verankerung in der eigenen Kultur gibt den jungen Menschen Sicherheit und Kraft im Alltag, wie auch in den oft schwierigen Lebens-Situationen. In der Tamilschule der Freiplatzaktion lehren tamilische LehrerInnen die Kinder ihre Muttersprache, was ihnen eine wichtige Basis gibt, um unsere Sprache zu erlernen. Seit ca. 2 Jahren ist Peter Valentin die Verbindungsperson zwischen Tamil-Schule und den schweizerischen Schulen. Die Zweisprachigkeit der Immigrantenkinder kommt schliesslich auch dem Gemeinwohl und der Wirtschaft zugute.

Wir wünschen den Mitarbeiterinnen und Mitarbeitern der Tamil-Schule weiterhin von Herzen alles Gute und viel Erfolg!

Reinach, den 29. Juni 1998

Barbara Frei-Koller
Präsdentin der Freiplatzaktion

Kontaktadresse: Barbara Frei-Koller, Florastrasse 12, 4057 Basel, Tel. 061 - 691 11 33
Privat: Bruggstrasse 15, 4153 Reinach, Tel. 061-713 08 01, Fax /04

# வாழ்த்துகின்றோம்.



இன்னொரு நாட்டிலிருந்து இங்கு வருபவர்கள் தமது தாய் மொழியினைச் செவ்வனே கற்றல் வேண்டும். இங்கு பேசப்படும் ஜேர்மன் மொழியைச் சரிவரக் கற்க இத் தாய் மொழி அறிவு உதவுகின்றது. எனவே இன்னொரு மொழியைக் கற்குமுன்பு தமது தாய்மொழியை இவர்கள் கற்கவேண்டியவர்களாகின்றார்கள். இப்படிக் கற்கும்போதுதான் தாய்நாட்டுக் கலாச்சாரங்களை இவர்களால் கற்றுக் கொள்ள முடிகின்றது.
மூன்று ஆசிரியர்களுடன் 1992ம் ஆண்டு ஆரம்பித்த இப்பாடசாலை, சில மாதங்களில் நான்காகி, பெற்றோர்களுடன் இணைந்து பிரைபிளாட்ஸ் அக்சியோன் அமைப்பின் உதவியுடன் முழுமையாகச் செயற்பட ஆரம்பித்தது.
இதே ஆண்டில் Sandgruben-Schulhausக்கு சொந்தமாகவிருந்த இரு Container களில் 31 பிள்ளைகளுடன் வகுப்புகள் ஆரம்பமாகின.
தற்பொழுது 100க்கு மேற்பட்ட பிள்ளைகளுடன் எட்டு ஆசிரியர்கள், பிரதி புதன்தோறும் மாலை நேரங்களில் இப் பாடசாலையில் தமிழ் வகுப்புகளை நடாத்தி வருகின்றார்கள். ஆசிரியர்களோடு பெற்றோர்களும் இணைந்து, நிர்வாக சபை உறுப்பினர்களாகச் செயற்பட்டு இப்பாடசாலை முன்னேற்றத்தில் அக்கறை காட்டி வருகின்றார்கள். 1997ம் ஆண்டின் முற்பகுதியில் இங்கு மேலுமொரு பாடசாலை ஆரம்பமாகியிருக்கின்றது. தமது பிள்ளைகள் அரசியல் சார்பற்ற கல்வி, கலாச்சார பாடங்களை எமது பாடசாலையில் கற்கமுடியும் என்பதில பெற்றோர்கள் சந்தோஷம் அடைவார்கள்.
எமது அமைப்பும், இங்கு வாழும் தமிழ் பிள்ளைகள் தம் மண்ணின் பாரம்பரியங்களையும், கலை, கலாச்சார அறிவினையும் இங்கு கற்க முடிவதில் பெருமகிழ்ச்சி அடைகிறது. இப்பாடசாலை தொடர்ந்து சிறப்பாக இயங்க எங்கள் முழுஅளவிலான உதவியையும் நல்குவோம். இப் பாடசாலையில் பிள்ளைகள் தமது தாய்மொழியைக் கற்பது, ஜேர்மன் மொழியைக் கற்க நல்லவொரு அடித்தளமாக இருக்கும். கடந்த இரு வருடங்களாக சுவிஸ் பாடசாலைகளுக்கும் தமிழ் பாடசாலைக்கும் இடையில் ஒரு இணைப்பதிகாரியாக திரு பீட்டர் வலன்ரைன் செயற்பட்டு வருகின்றார். தமது தாய்மொழியை பிள்ளைகள் பிறமொழிகளுடன் தெரிந்து வைத்திருப்பது பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் என்பது திண்ணம்.
இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் அனைவர்க்கும் இப்பணி தொடர எம் நல்வாழ்த்துக்கள்.

Barbara Frei-Koller
தலைவர்- பிரைபிளாட்ஸ் அக்சியோன் அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

Als Koordinator der Tamilschule der Freiplatzaktion sehe ich meine Aufgabe darin, zwischen drei Polen zu vermitteln und gegenseitig Informationen auszutauschen. Der erste Pol ist die Schule selbst, ihre Schülerinnen und Schüler, ihre Lehrerinnen und Lehrer und natürlich auch die Eltern der uns anvertrauten Kinder. Der zweite Pol ist der Staat, d.h. das Erziehungsdepartement von Basel-Stadt und die Erziehungsdirektion von Basel-Land. Ich halte es für wichtig, dass auch die Lehrerinnen und Lehrer an den schweizerischen Schulen, von uns und unseren Bemühungen wissen. Der dritte Pol ist die Freiplatzaktion für Asylsuchende von Basel und Umgebung, die als Verein Trägerin der Schule ist. Es ist mein Wunsch und mein Bemühen, diese drei Pole einander näher zu bringen und damit zur Erhaltung der tamilischen Sprache und Kultur unter der tamilischen Jugend beizutragen. Für die Arbeit an der Schule danke ich meinen tamilischen Kolleginnen und Kollegen und wünsche ihnen Erfolg und Befriedigung.

**Peter Valentin**
**Koordinator der Tamilschule Basel**

பாசல் தமிழ்ப்பாடசாலைக்கான Freiplatzaktion அமைப்பின் தொடர்பு அதிகாரி என்ற முறையில், இங்கே சில வார்த்தைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சுருங்கக் கூறினால், மும்முனைகளை இணைக்கும் ஓர் அதிகாரியாகப் பணியாற்றி வருகின்றேன். முதல் முனைக்குள் உட்பட்டவர்களாக பாடசாலை மாணவ, மாணவிகளுடன் ஆசிரியர்களும், மாணவர்களின் பெற்றோரும் வருகின்றனர். இரண்டாவது முனை பற்றி குறிப்பிடவரும்போது, முதலில் வருபவர்கள் பாசல் நகரசபை நிர்வாகிகளே. இதில் அடங்கும் அடுத்தவர்களான சுவிற்சிலாந்தின் பாடசாலை ஆசிரியர்களுக்கு இப்பாடசாலை பற்றி மேலும் தெரிய வருவதே எனது விருப்பமாகும். இப்பாடசாலையை ஒழுங்காக கொண்டு செல்வது, இறுதி முனையாக வரும் Freiplatzaktion Basel அமைப்பேயாகும். எனது விருப்பம், இம்மூன்று முனைகளும் ஒருங்கிணைந்து திறம்படச் செயற்பட்டு, இங்குள்ள இளம் தமிழ் சிறார்க்கு தமிழ் மொழி, கலாச்சாரத்தை அறியத்தரவேண்டும் என்பதேயாகும்.

இப்பாடசாலையில் பணியாற்றும் ஆசிரிய, ஆசிரியைகள், தமது பணியில் வெற்றியும் நிறைவும் காண எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

திரு. வலன்ரைன்

எழுமின்! விழிமின்! இலக்கை எட்டும்வரை தொடர்ந்து செல்மின். -விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆல்போல் வேரூன்றி...

கவிட்சிலாந்தின் பாசல் நகரில் , இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வாழ்கின்ற தமிழ்சிறார்களின் தாய்மொழி, கலை, கலாச்சாரம் போன்ற எமது தாயகப் பாரம்பரியங்கள் மறைந்தும் மறந்தும் போகாமல் இருக்கவேண்டும் என்ற நல்ல பொதுநோக்குடன் ஆரம்பிக்கப் பட்டதே, இத் தமிழ் பாடசாலையாகும். சில பாசல் அகதிகள் நலன் விரும்பிகளு டன் ஒத்துழைப்புடனும், சில தமிழ் நண்பர்களுடனும் இப்பாடசாலையைச் சிறிய அளவில் தொடக்கிய ஆரம்பகர்த்தாக்களில் நானும் ஒருவன் என்பதைப் பெரு மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். பல ஆண்டுகள் கழித்து, இப் பாடசாலை ஆலவிருட்சம் போல் வேரூன்றி , விருதுகள் விட்டு பெரிய அளவில் இயங்குவதையிட்டு மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

இன்று இப்பாடசாலை நிர்வாகம் மலர் வெளியிடுவதையிட்டு அளவுகட ந்த ஆனந்தம் அடைகின்றேன். இச் சந்தர்ப்பத்தில் , இப்பாடசாலையில் பணியாற் றும் ஆசிரியர்களுக்கும், நிர்வாக அங்கத்தவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னுடைய உதவி, ஒத்தாசைகள் எப்பொழு தும் தொடர்ந்து கிடைக்கும் என்று கூறி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு !

அன்புடன்
**கந்தையா வினாசித்தம்பி**
(முன்னாள் தமிழ்ப்பாடசாலைக்கான F.P.A இன் பிரதிநிதி)

# நம்பிக்கைப்பூக்கள்!

கெட்டிக்கார கோழிக்குஞ்சு முட்டைக்குள்ளிருந்தே கூவும். (யாரோ)

சூரிய ஒளி வேண்டுமானால், உனைச்சுற்றியுள்ள சூனியங்களில் இருந்து விடுபடு! (ஆ.சாந்தினி-ஜேர்மனி)

சிறகுகளை உடைத்துவிட்டுப் பறக்க விரும்பாதே! விழுந்து விடுவாய்! (ஆ.சாந்தினி- ஜேர்மனி)

தீயிற்கு வாழ்க்கைப்பட்டாலும், விறகுகூட விட்டுவைக்கிறது அதன் சாம்பலை! மனிதனே... உனக்குப்பின் உயிர்வாழ என்ன வைத்திருக்கிறாய்?
(வே.செந்தில்குமார்)

ஆரம்பிக்கட்டும் உன் வேள்வித் தீ!

"முடியுமா" என்று மலைக்காதே
உளி போதுமே... மலையைப்

இளைஞனே... சோம்பலை
இவ்வுலகில் நீ



மனிதா! மூலையில் இருக்கும் சிறு
பிளக்க!

நீ களையெடுத்தால்,
தலையெடுப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எமது நாட்டில் ஏற்பட்ட சீர்குலைவின் காரணமாக நாம் நம் உயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் மேலைத்தேசமெங்கும் தஞ்சம் புகுந்துள்ளோம். அதனால் எமது தமிழினத்தின் கலை, கலாச்சாரங்கள் அழிந்து போகாமல் பாதுகாக்க வேண்டியது பெற்றோர்களாகிய எமது கடமையாகும். எம் தாய்நாட்டிலேயே அகதிகளாக வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கு நம்மவர் தளள்ளப்பட்டிருந்தும் கூட , பல்கலைக் கழகம் செல்லும் மாணவர்களையிட்டுப் பெருமைப்பட வேண்டும்.

நாம் எந்த நாடுகளில் வாழ்ந்தாலும் , அந் நாட்டவர்கள் எந்த இனத்தவர்களாக இருந்தாலும் தத்தம் தாய்மொழியை வளர்ப்பதற்கு உதவி வருகின்றார்கள். இங்கு வாழும் சிறார்கள்தாம் எம் இனத்தின் வருங்காலச் சந்ததிகள்.அவர்களின் எதிர்காலத்தைப் பாழடிக்காது, மேலை நாட்டு மோகம் கொள்ள விடாது எம் நாட்டு நிலைமைகளை அடிக்கடி பிள்ளைகளுக்கு நினைவுபடுத்தி, அவர்கள் திசைமாறி விடாமல் நாம் கண்காணிக்க வேண்டும். முக்கியமாக இங்கு சிறுவயதில் வந்த பிள்ளைகளையும், இங்கு பிறந்து வளர்பவர்களையும் முக்கியமாக நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.
எம் நாட்டிலேயே எம் மொழி கௌரவிக்கப்படாத நிலையில், இங்குள்ள மேலை நாட்டவர்கள் எம் சிறார்களின் நிலையறிந்து தமிழ் கற்க உதவி வருவது என்றுமே மறக்க முடியாததாகும். அந்த வகையில் Freiplatzaktion அமைப்பினரின் உதவி மகத்தானது. மிகச் சிறிய அளவில் ஆரம்பித்த இத் தமிழ் பாடசாலை இன்று 100க்கு மேற்பட்ட மாணவர்களுடன் வளர்ந்திருப்பது, இந்த அமைபின் உதவியால்தான் என்றால் மிகையாகாது.

எந்த ஒரு மனிதனும் எம் மொழியைக் கற்பதானாலும், தாய்மொழி தெரிந்தால்தான் மற்றைய மொழிகளையும் விளங்கிக்கொள்ள முடியும். அந்த வகையில் கட்டாயம் எம் இளம் சந்ததியினருக்கு தாய்மொழி அறிவு முக்கியத்துவம் பெறுகின்றது. எம் இனத்தின் பாரம்பரியங்களைக் கட்டிக்காக்க பெற்றோராகிய நாம், ஆரம்பத்திலிருந்து அன்பு, அறிவு, ஒழுக்கம்,பண்பு, கலை, கலாச்சாரம் போன்றவற்றை எம் பிள்ளைகள் தெரிந்து கொள்ள ஒத்தாசை செய்ய வேண்டும்.

அக்கிரமங்களினால் அழிந்துபோன எம் தாயகத்தை வளமாக்கும் எம் வருங்காலச் சந்ததியினருக்கு எந்தச் சிரமத்தின் மத்தியிலும் , பெற்றோர் தாய்மொழியாம் தமிழைக் கற்பிக்கத் தவற வேண்டாம் என்பதே என் அன்புக் கோரிக்கையாகும்.


**இராசையா மகேந்திரன்**
**(முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்,**
F.P.A. **இன் முன்னாள் பிரதநிதி)**


சோம்பலும் சோர்வும் கொண்டு நூறாண்டு உயிர் வாழ்வதை விட, ஒருநாளேனும் பெருமுயற்சியோடு வாழ்தல் மேலானது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம் பெயர்ந்த மண்ணில் தமிழும் தமிழரும்

புலம்பெயர்ந்த அந்நிய மண்ணில் அகதிகளாக வாழும் தமிழர்களாகிய நாம் இன்று பற்பல முயற்சிகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளோம். அவற்றில முக்கிய பங்கு வகிப்பது , எமது தாய்மொழியாகிய தமிழின் நிலைப்பாடே!

இன்று எம்மில் பலர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இப்படி வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரும் ஒரேமொழி பேசும் நாட்டில் வாழவில்லை என்பது அனைவரும் அறிந்ததே!

இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் ஆங்கிலத்தைப் பின்பற்றுபவர்களாகவும், ஜேர்மன் நாட்டில் வாழ்பவர்கள் ஜேர்மன் மொழியின் தாக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும் , சுவிஸ் நாடடிலுள்ளவர்கள் ஜேர்மன், பிரெஞ், இத்தாலி ஆகிய மூன்று மொழிகளின் தாக்குதலுக்கு உட்பட்டவாகளாகவும் இருந்து வருகின்றார்கள். இப்படியாக வெவ்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு மொழியையே பேசுபவர்களாக இருக்கின் றார்கள். அந்நிய மொழியைக் கற்கும்போது, பேற்றொர்களாகிய நாம் தாய் மொழியை மறந்து விடுவதில்லை. ஆனால் இங்குதான் நாம் ஒரு முக்கிய பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அது எமது வருங்கால சந்ததியினராகிய எமது பிள்ளை களின் தாய்மொழி அறிவு பற்றியதுதான்.

பிள்ளைகள் தாம் வாழ்கின்ற நாட்டு மொழிகளையே கற்று வருவதால், தாய் மொழியாம் தமிழைக் கற்கமுடியாமல் போய்விடுகின்றது. அத்தோடு பெற்றோர்களாகிய நாமும், நாங்கள் வாழும் நாட்டின் மொழியிலேயே எமது குழந்தைகளுடன் உரையா டுவதற்கு முற்படுகின்றோம். இப்படியான தருணங்களில் அந்நிய மொழியை இலக்கணப் பிழையுடனேயே உரையாடி, பிள்ளையின் மொழி அறிவையும் குழப்பி விடக் காலாகி வீ டுகின்றோம்.

எனவே கூடியமட்டில் எமது குழந்தைகளுடன் எமது தாய்மொழியிலேயே உரையாடி வரவேண்டும். அத்துடன் பிள்ளைகள் தமிழைக் கற்பிக்க ஆவன செய்து கொடுக்க வேண்டியது, பெற்றோராகிய எமது கடமையாகும். வெவ்வேறு மொழிகளைப் பேசும் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் ஒன்றுசேர சந்தர்ப்பம் வரும்போது தாய்மொழியாகிய தமிழால் மாத்திரமே எல்லோரையும் ஒன்றுசேர்க்க முடியும். எம் சிறார்கள் தமிழைக் கற்காமலும், உரையாடாமலும் இருந்தால் , இப்படியான சூழ்நிலை யில் நம் இனத்தவர்களை நாமே அந்நியர்களாகக் கருதும் அவலந்தான் ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு இப்பொழுது தமிழ் பெற்றோர்களின் முயற்சியால், தங்கள் வருங்கால சந்ததியினர், தமிழைக் கற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது பெருமைப்படவேண்டிய ஒன்றாகும்.

**'புலம் பெயர்ந்தாலும் நம் புலத்தை மறவாதிருத்தல் வேண்டும்**
**நம் சந்ததியினர் தமிழ் மொழியை மறவாதிருத்தல் வேண்டும்!'**

**ரவி செல்லத்துரை**
**(நிர்வாக சபை உறுப்பினர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாச்சார மோதல்கள்!

இலங்கையில் தமிழர், உரிமைப் பிரச்னை காரணமாக ஏற்பட்ட சாத்வீகப் போராட்டம், பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறிய வேளையில், பெருமளவில் தமிழ்மக்கள் உலகநாடுகளுக்கு புலம் பெயரத் தொடங்கினார். இன்றும் புலம்பெயர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். முக்கியமாக உலகநாடுகளான கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா, நியூ சிலாந்து போன்றவை புகலிடம் கொடுத்துள்ளன.

தமிழர்கள் தாம் சென்று குடியேறிய நாடுகளில் தமிழ்மொழியையும், பண்பாட்டு பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் மறக்காது கடைப்பிடித்து வருவது போற்றுதலுக்குரியது. அதாவது இன்றைய நிலையில் அந்நாடுகளில் பல்லினக் கலாச்சாரத்தைத் தழுவிய வாழ்வியல் சூழலும், தமிழ்மக்கள் தாய்மொழியில் பேசவும் தொடர்பு கொள்ளவும் கருமங்களைச் செய்யவும் பின்னிற்பதில்லை. சமயசமபந்தமான வழிகளில் கோவில்களை அமைத்தும், சமய அனுஷ்டானங்கள், வழிபாடுகள் செய்தும் வருகின்றார்கள். அதுபோல் தமிழ்மொழி வளர்ச்சிக்கு பல்வேறு சங்கங்கள், மன்றங்கள், சபைகளை ஏற்படுத்தி இலக்கிய விழாக்கள் சமயவிழாக்கள் போன்றவற்றை பெருமையுடன் நடாத்தி வருவதும் தெளிவு.

அது மட்டுமல்ல தமிழ்த் தினசரிகள், சஞ்சிகைகள், புத்தக வெளியீடுகள் இன்னோரன்ன பலவும் நடைபெற்றுக் கொண்டிருப்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இன்னும் தமிழகத்திலிருந்தும், இலங்கையிலிருந்தும் அறிஞர்கள் வருகைதந்து தமிழ் வளர்ச்சிக்கு உதவியும் ஒத்தாசையும் செய்து வருகின்றார்கள்.

தற்பொழுது ஆங்காங்கு தமிழ் சிறார்களுக்குப் பள்ளிக்கூடங்களும் நிறுவப்பட்டு, பாடங்கள் தமிழில் போதிக்கப்பட்டு வருகின்றன. வயதில் கூடியவர்களுக்கு சங்கீதம், நடனம் போன்ற தமிழ் பாரம்பரியக்கலைகளும் கற்பிக்கப்படுகின்றன. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தமிழ்மொழி அறிவூட்டுதல், சமயசம்பந்தமான அறிவைப் புகுத்துதல், இறைநம்பிக்கையை ஊட்டுதல் போன்றவற்றில் ஈடுபடக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும்.

இன்றைய நிலைப்பாட்டில் புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளில் வாழும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம்பற்றி ஐயப்பாடும் கிலேசமும் கொண்டுள்ளார்கள். பல்வேறு சூழ்நிலைகளினாலும் நாகரீகத் தாக்கத்தினாலும் படிக்கும் பருவத்தில் உதவாக்கரையாகப்போய் விடுவார்களோ என்ற வேதனையும்கூட அவர்களை வாட்டி வதைக்கின்றது.

எதிர்கால இளையதலைமுறை எப்படியெல்லாம் மாற்றமடையுமோ என்பதைக் காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

இந்திரன் ஆனந்தரான்

( தமிழ்ப் பாடசாலைக்கானFPA இன் பிரதிநிதி )

**தோல்விதான் என்றாலும் போராடித் தோற்றால் அது வெற்றிதான்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த மண்ணிலும் இனிய தமிழ்!

இன்று பல பிரச்சினைகளுக்கு மத்தியில், எங்கள் பிள்ளைகள் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் எங்கள் தாய்மொழியாகிய தமிழை மறக்காது இருக்கின்றனர். இதற்குக் காரணம் பெற்றோர்களின் ஊக்கம் என்றுதான் சொல்லவேண்டும். இத்துடன் சுவிஸ் நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களிலுள்ள அமைப்புகள், அதிலிருக்கும் நிர்வாக சபை உறுப்பினர்கள் , ஆசிரியர்கள் அளிக்கும் பங்களிப்பை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இவர்களுள் ஆசிரியர்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர். காரணம் ஒவ்வொரு ஆசிரியருக்கும் பல்வேறு பிரச்சினைகளிருந்தும் தங்கள் சிரமத்தைப் பாராமல் சொந்தப் பிரச்சினையாக நினைத்து தங்கள் நேரத்தின் ஒருபகுதியை ஒதுக்கி ஊக்கத்துடன் செயற்படுவது, போற்றக்கூடிய ஒன்றே. அதேபோல் மாணவர்களும் எவ்வளவோ தொலைவுக்கு அப்பாலிருந்தும் தமது சிரமத்தைப் பாராமல் புகையிரதம் மூலம் வருகை தருகின்றனர். இது வரவேற்ககத்தக்கது.

அகதியென்று தஞ்சம் புகுந்த எங்களுக்கு பாடசாலை வசதிகள் தந்து எங்கள் கலாச்சார விழாக்கள் கொண்டாட இடவசதிகளை இன்முகத்தோடு தருகின்ற இந்நாட்டவரின் பெருந்தன்மையை மறத்தலாகாது. ஏங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் தாமும் பெருமிதம் அடைபவர்களாக இந்நாட்டவர்கள் நடந்து கொள்வது எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது.

இந்த வெளிநாடடு வாழ்க்கை நிரந்தரமானதல்ல என்பதைப் பெற்றோர்கள் கருத்தில் கொண்டு தமது பிள்ளைகள் தமிழைக் கற்க நல்ல ஊக்கமளித்தல் வேண்டும். சில பெற்றோர்கள் இந்த விடயத்தில் அசட்டையாக இருப்பது கவலைக்குரியதே! சொந்த மண்ணிற்குத் திரும்பும் பட்சத்தில் இவர்கள் பிள்ளைகள் எந்த மொழியில் மற்றவர்களோடு உரையாடப் போகின்றார்கள் ?

தமழ் கற்க என்று வரும் சிறார்கள் ஏனைய தமிழ்ப் பிள்ளைகளுடன் நட்புக் கொண்டு பழக முடிகின்றது. கலைநிகழ்ச்சிகளிலும் பங்குபற்றும் ஆர்வமும் தோன்றி விடுகின்றது. அந்நிய நாட்டிலும், நமது நாட்டிற்குரிய கலாச்சாரங்களை பிள்ளைகள் கற்க வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

எனவே இனிய தமிழை, இந்த மண்ணில் கற்க நல்ல பணியாற்றும் பாசல் தமிழ்ப் பாடசாலையின் அரும்பணி தொடர என் வாழ்த்துக்கள்.

திருமதி பத்மினி இரவீந்திரன்
(ஆசிரியை)

இளைஞனே! சோகத்தை மேகமென நினை.
சுகம் வானமாக விரியும்! -ரிஷிவந்தியா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய உலகும் தமிழ்க் கல்வியும்

மனிதன் இறைவனால் படைக்கப்பட்டவன். அவன் ஆறறிவு படைத்தவன். சிந்தித்து செயற்படக் கூடியவன். அவனால் சிந்தனை செய்த பல கண்டுபிடிப்புகளினால் உருவாகியதுதான் இப்போது உள்ள விஞ்ஞான உலகம் ஆகும். இந்த விஞ்ஞான உலகத்தில் வாழ்கின்ற மக்கள் பல்றேு இன, மத, மொழிகளைச் சார்ந்தவர்களாக உள்ளனர். இதில் ஒரு பகுதியினர் தமிழ் பேசும் தமிழர்கள் ஆவர். தமிழர்கள் இன்று பல நாடுகளில் வாழ்கின்ற போதிலும், அவர்களுக்குத் தாய்நாடு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளாகும். இவ்விரு நாடுகளிலும் வாழ்கின்ற மாணவர்கள், சுலபமாக தமிழ்க் கல்வியைக் கற்கக் கூடியதாக உள்ளது. ஆனால் வெளி நாடுகளில் வாழ்கின்ற தமிழ்ச் சிறார்கள் தமிழ் கற்க பல கஷ்டங்களை அனுபவித்து வரகின்றார்கள். ஆயினும் தற்போது பல நாடுகளில் தமிழ்ப் பாடசாலைகள் உருவாகி வருகின்றன. அதில் ஒன்றுதான் சுவிஸ் நாட்டில் பாசல் நகரில் உள்ள தமிழ்ப் பாடசாலையாகும்.

மனிதன் பிறந்தது சேவை செய்யவே! சேவையின் காரணமாக ஊதியத்தைப் பெறுகிறான். ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை என்னும் பாதையில் நடக்கிறான். ஒவ்வொரு மனிதனும் சேவையென்னும் கடமையை சரிவரச் செய்ய வேண்டும். அப்போதுதான் சுபீட்சமான நாட்டை உருவாக்க முடியும். இந்த நாட்டிற்குத் தேவை அறிவாற்றலுள்ள தலைவர்களும், விஞ்ஙானிகளும் ஆவர். இன்றைய சிறார்கள்தான் நாளைய தலைவர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் மாறுவார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். இவர்களைச் சரியாக வழிநடத்துதல் ஒவ்வொரு பெற்றோருக்கும், ஆசிரியர்க்கும் உள்ள கடமையாகும்.

பெற்றோர்கள் குழந்தை பிறந்தவுடன் காட்டுகின்ற அன்பும், கவனிப்பும் மிகக் கூடுதலாக இருக்கும். அதே கவனத்தை அக்குழந்தை வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் பருவத்தில் காட்டத் தவறினால், பிள்ளையின் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது. சில பெற்றோர்கள் பிள்ளைகள் மீது கூடுதலான கவனம் எடுப்பதனால் அவர்கள் கல்வியில் மிகவும் முன்னேற்றத்துடன் காணப்படுகின்றனர். எனவே பெற்றோர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் உண்டாயினும், பிள்ளையின் வளர்ச்சியில் கூடுதலான பங்களிப்பு செலுத்தியே ஆகவேண்டும். உலகில் **பிறக்கும் பிள்ளைகள் எல்லோரும் அறிவுள்ளவர்களாகவே பிறக்கிறார்கள் ஆனால் அவர்களை சரியான வழிநடத்தி, அறிவைப்பெருக்கி, இந்த நாட்டிற்கும் உலகத்திற்கும் பயனுள்ளவர்களாக்கும் பொறுப்பு பெற்றோர்களையும்** ஆசிரியர்களையும் சார்ந்தது என்பதே என் கருத்தாகும்.

பொ. நாகேஸ்வரன்
ஆசிரியர்

---

இளைஞனே.. உன் கரம் உயர்ந்தால்தான்
நாட்டின் தரம் உயரும்! -ரிஷிவந்தியா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் சிறப்பு

தமிழருக்கென்று பண்புண்டு.. தனித்துவமான குணமுண்டு என்பதற்கிணங்க தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் நல்ல பண்புகளில் ஒன்று கல்விக்கு மதிப்பளிப்பதாகும். கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது தெட்டத் தெளிந்த உண்மையாகும்.

திருவள்ளுவ பெருந்தகையும் கல்வியின் சிறப்பையும் ..கல்லாமையின் இழிவையும்.. கேள்வியின் மதிப்பையும்.. அறிவுடமை பற்றியும் தனது திருக்குறளில் நான்கு அதிகாரங்களில் விளக்கிக் கூறியிருக்கின்றார்.

எண்ணும் எழுத்தும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு என்றும், அந்தக் கண்களையுடையவர் என்பவர் கற்றோர் என்றும் .. கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையவர் என்றும் கல்வியின் சிறப்பை எடுத்துரைத்துள்ளார். கொன்றை வேந்தனிலும் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றும்.. பிச்சை புகினும் கற்கை நன்றே என்றும் கூறப்பட்டுள்ளது. ஔவைப் பாட்டியும் எண் எழுத்திகழேல் என்றும்.. எண்ணும் எழுத்தும் மக்களுக்கு இன்றியமையாதது பற்றியும் எடுத்துரைத்துள் ளார்.

ஒருமைக் கண் தான் கற்ற கல்வி
எழுமையும் ஏமாப் புடைத்து

இப்படிக் கூறுகின்றார் வள்ளுவர். ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை கொண்டது என்பதையே இக் குறளில் விளக்குகின்றார். கல்லாத உயர்ந்த குடியில் பிறந்தவராயினும்.. தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்வி கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரேயாவார் என்ற உண்மையை

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

என்ற தன் குறள் மூலம் விளக்குகின்றார் வள்ளுவர். கல்லாமையின் இழிவு பற்றிக் கூறும்போது கல்லாதவர்களை விலங்குகளுக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார். ஒருவருக்கு அளவிற்கரியதும்,அழிவில்லாததுமான செல்வம் கல்வியாகும். பொன்னும் பொருளும் பெரிதாக மதிக்கப்படும் செல்வங்களல்ல. கல்லாதான் சொல் அவையில் எடுபடுவதில்லை என்பதை வள்ளுவரின்

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண் காமுற் றற்று

என்ற குறளில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.. இளமையில் கல்வி கற்க வசதியில்லாத ஒருவர் தன் கேள்வியறிவு மூலமும் தன் அறிவை வளர்த்துக் கொள்ளலாம் என்பதையும் வள்ளுவர் வற்புறுத்தியிருக்கின்றார்.

இப்படிப் பல சிறப்புக்கள் வாய்ந்த கல்வியை எம் தமிழின மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் கற்றும். கற்பித்தும் உய்ய வேண்டும்.எம் தாய் மொழி அறிவையும் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

திருமதி நந்தினி மனோரதன் (ஆசிரியை)

கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனிதர்களே எப்போதும் வெற்றி பெறுகிறார்கள். -ஜான் மில்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகளின் கல்வியும் பெற்றோர்களின் பங்கும்

கல்வியானது முடிவேயில்லாமல் ஒவ்வொருவராலும் கற்றுக்கொள்ளக் கூடியது. கற்கக் கற்க அறிவு வளர்ந்து கொண்டே போகும். இந்த அறிவானது ஆரம்பத்தில் பெற்றோர்களால் உணவு ஊட்டுவது போன்று கொடுக்கப்படுகின்றது. பெற்றோர்களின் ஊக்கம்தான் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு ஆர்வத்தை உருவாக்கும். ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அத்திவாரம் எழுப்பிவிட்டால் மட்டும் போதாது, அதைக் கட்டி முடித்தால்ததான் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களின் பங்கும் கட்டிடம் போன்று ஆணித்தரமாக இருக்க வேண்டும். கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் புகழ் கிடைக்கும். தம்முடைய ஓய்வு நேரங்களிலும், பிள்ளைகளின் ஓய்வு நேரங்களிலும் அவர்களின் கல்வியில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர்கள் என்ற பெயரில் மாத்திரம் இருந்துவிடக்கூடாது. அறிவைப் போதிய அளவு வளர்க்க வேண்டும். அறிவை வளர்க்க அன்பும், ஆற்றலும், கண்டிப்பும் இருக்க வேண்டும். அடியாத மாடு படியாது என்பார்கள். காலத்தால் அழியாததும், அழிக்க முடியாததும் கல்வி அறிவு ஒன்றுதான். பாடசாலையில் படித்தால் மட்டும் போதுமென்று விட்டுவிடாமல், மேலும் மேலும் ஒவ்வொரு பெற்றோரும் அறிவை வளர்க்க வீடுகளில் முயற்சி செய்ய வேண்டும். கால் போன போக்கில் நடக்கலாம், மனம் போன போக்கில் போகலாம். ஆனால், கல்வியை மனம் போன போக்கில் கற்க முடியாது.

"கற்றது கையளவு
கல்லாதது உலகளவு" என்பார்கள்.

கடலின் ஆழத்தைப் போன்றதுதான் கல்வி அறிவும்! அதன் ஆழத்தை நாம் அறிய முடியாது. பிள்ளைகள் கல்வியில் சிறந்தவர்களாக இருந்தால், அதில் பெருமை அடைபவரும், மற்றவர்களினால் புகழ்ந்து பேசப்படுபவரும் பெற்றோர்கள்தானே.

**மனோகரி சுப்ரமணியம்**
**(உதவி ஆசிரியை)**

விரைந்து செயலாற்றுங்கள். நல்லதே நடக்கும். -ராபர்ட் சவுத் வேல்.



தமிழ்த்தாய் (பெருமையாக): என்னுடைய பிள்ளைகள் ஒரு தமிழ்ச் சொல்லும் கதைக்க மாட்டினம்.
ஐரோப்பியத் தாய்: அப்படியென்றால் உடனே வைத்தியரிடம் காட்டி பரிசோதியுங்கள்.
தமிழ்த் தாய்: ஏன்...?
ஐரோப்பியத் தாய்: சில வேளை ஊமையாக இருக்கலாம்!
தமிழ்த் தாய்: !!!???...

-ரவி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமாக முன்வந்து சின்னச்சின்ன தியாகங்கள் செய்வதிலேதான் வாழ்க்கையின் முழு இன்பமும் உள்ளது. -ஜான்செல்டன்.



# குழந்தைகளும் கல்வியும்



குழந்தைகளின் ஆற்றல்மிகு அறிவு வளர்ச்சிக்கு கல்வி அவசியம் தேவைப்படுகின்றது. குழந்தைப் பருவத்தில் உணவு உயிர் வாழ்வதற்கு தேவைப்படுகின்றது போல் அறிவுள்ள செல்வங்களாகப் பிள்ளைகள் வளர கல்வியும் அவசியமாகின்றது. குழந்தை போசாக்கு நிறைந்ததாக இருந்தாலும் தாய் அடையும் மகிழ்ச்சி எதில் தெரியுமா? குழந்தையின் வாயிலிருந்து வரும் மழலைச் சொற்களைக் கேட்பதுதான் தாய்க்கு அளவுக்கு அதிகமான ஆனந்தத்தைக் கொடுக்கின்றது.

குழந்தைகள் சிறுவயதில் ஆரம்பக் கல்வியை இலகுவாகக் கற்றுக் கொள்கின்றனர்.அவர்கட்கு கல்வி அறிவை ஊட்டுகின்ற தலையான பொறுப்பை முதலாவதாக ஆசிரியர்களும், இரண்டாவதாகப் பெற்றோரும் வகிக்கின்றார்கள். அன்பினால் அறிவை ஊட்டவேண்டியது இவர்கள் பொறுப்பாகின்றது. அவர்களின் ஆரம்பக் கல்வி அறிவு காரணமாகத்தான் படிப்படியாக வாழ்க்கையில் உயர்வு அடைகின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகட்கு அவசியம் தேவைப்படுவது கல்விதான். கல்வி என்றுமே அழியாதது. வீட்டு அத்திவாரம் நன்றாக இருந்தால்தானே கட்டும் வீடு பலமானதாகவும் ஊறுதியயானதாகவும் இருக்கும். இதுபோல்தான் குழந்தை தனது சிறுவயதில் சிரத்தையோடு சுற்பது, அதன் பிற்கால வாழ்வை வளமாக்க பேருதவி புரிகின்றது. கல்வி இக் குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைப் பழகி நல்லொழுக்கமுள்ள குழந்தையாக வளர உதவுகின்றது.

பலவற்றையும் கற்கும் குழந்தை, தனது தாய்மொழியையும் கற்கவேண்டியது மிக அவசியமானது. தாய் மொழியறிவற்ற குழந்தையின் கல்வி பூரணமானதல்ல. ஒரு குழந்தையின் வாழ்வில் தாய் எவ்வளவு முக்கியத்துவம் வகிக்கின்றாளோ, அது போல தாய் மொழியும் குழந்தையின் வாழ்வில் அவசியமான ஒன்றாகும். வெளிநாடுகளில் எமது குழந்தைகள் பலதையும் கற்க உதவுவதுபோல, தமிழையும் கற்க உதவ வேண்டியது அவசியமாகும். இதை நாம் என்றுமே மறத்தலாகாது.

திருமதி பத்மாஜனதேவி தர்மராசா
( ஆசிரியை )

# உங்களுக்குத் தெரியுமா?

1. சுவிஸ்லாந்து இதுவரை எந்த நாட்டுடனும் சண்டை போட்டதில்லை. இருப்பினும் இங்கு இராணுவப் பயிற்சி கட்டாயம்.

2. இத்தாலியில் பைசா கோபுரத்தை கட்டி முடிக்க எடுத்த காலம் - 174 ஆண்டுகள்.

3. இலங்கையில் மாத்திரமல்ல இந்தியா, பாகிஸ்தான் நேபாளம் போன்ற நாடுகளிலும் பயன் படுத்தப்படும் நாணயத்தில் பெயர் - ரூபாய்.

4. உலகின் மக்கள் தொகை ஒவ்வொரு வாரமும் 5 இலட்சம் என்று அதிகரிக்கிறது.

5. உடம்பில் இருந்து வெளியேறும் வெப்பத்தில் பாதியளவு தலை வழியாகவே வெளியேறுகிறது.

6. பைபிளில் "And" என்ற வார்த்தை 46,277 முறை வருகின்றது.

7. சீனாவில் சிலுவைக்குறி தொங்கினால் - அது அடகுக் கடை.

8. அரைக்கிலோ பஞ்சிலிலிருந்து உருவாக்கப்படும் மெல்லிய நூலின் நீளம் சுமார் 3300 கிலோமீற்றர்.

9. பட்டாம்பூச்சிக்கு அதன் பின்னங் கால்களில்தான் சுவை அறியும் உறுப்பு இருக்கின்றது.

(தொகுப்பு: ஏ.ஜே.ஜீ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நிய நாட்டு வாழ்வின் அவலங்கள்...





நாம் இலங்கையர். நம் நாட்டு யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து, இனசனங்களைப் பிரிந்து, பல இன்னல்களுக்கு மத்தியில் அந்நிய நாட்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். நமது பிள்ளைகளின் கல்வி, கலாச்சாரம், எதிர்காலம் எல்லாமே கேள்விக்குறியாக உள்ளன. நமது ஆண்கள் இங்கே படும் கஷ்டங்கள் சொல்லில் அடங்காது. நம் சொந்த மண்ணில் விவசாயம் செய்வதற்கு வயலில் எருது மாடுகளை ஏர் பூட்டி உழுது பண்படுத்துகிறோமே. அந்த எருது மாடுகளிலும் கேவலமாகத்தான் எத்தனையோ மணித்தியாலங்களாக நம்மவர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் அவ்வேலைக்கேற்ப ஊதியம் கிடைப்பதில்லை. ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் கற்ற கல்விக்கேற்ப வேலை கிடைப்பதில்லை. ஏதோ கஷ்டத்தின் மத்தியில் வந்து சேர்ந்துவிட்டோமென்பதற்காக வந்த ஒவ்வொரு மனிதனும் கிடைத்த வேலைகளைச் செய்து தம் தம் குடும்பங்களைக் காப்பாற்றுகிறான். மேலும் இது இவ்வாறிருக்க, சிலர் தமக்கு கிடைத்த வேலைகளைப் பயன்படுத்தி தப்பான வழிகளிலும் செல்கிறார்கள். தம் கலாச்சாரம், பண்பாடு, கௌரவம் எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு அந்நிய நாட்டின் மோகத்திற்கு அடிமையாகி உள்ளார்கள். இங்கே நம் மக்கள் படும் துயரங்கள் சொல்லில் அடங்காது. வீட்டிலே பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு சுதந்திரம் கிடையாது. ஏனென்றால் நமது சொந்த மண்ணில் வீடுகளில் இருந்து பிள்ளைகள் சுதந்திரமாக சப்தம் போட்டு விளையாட முடிந்தது. இங்கும் வந்து அவர்கள் அதே பழக்கங்களைக் கைகொள்கிறார்கள். பிள்ளைகள் பின்விளைவுகள் தெரியாமல் செய்த குற்றத்திற்காக, இருக்கும் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைமைகூட உருவாகிறது. பின் மீண்டும் வீடு தேடும் படலம் ஆரம்பமாகிறது. B card இருக்கின்றதா, C card இருக்கின்றதா போன்ற கேள்விகளுக்கு விடை கூறி ஒரு மாதிரியாக வீடு எடுத்து கவனமாக இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கின்றோம். இன்னும் எமது அந்நிய நாட்டு வாழ்வின் அவலங்களை எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் நம் மனநிம்மதிதான் குன்றிவிடும்.


திருமதி மங்கையற்கரசி சிவராஜசேகரன்

துயரம் இதயத்தை வலிமையாக்கும்! -ஜார்ஜ் பெய்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் வியப்புறு விந்தைகள்





இன்றைய விஞ்ஞான உலகில் எத்தனையோ வியப்பூட்டும் சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டு வருகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகள் இவ்வரிசையில் முன்னணியில் நிற்கின்றன. இந்த விஞ்ஞானத்தின் பல நிகழ்வுகள் எம்மை வியக்கவைக்கின்றன என்பதை மறுக்க முடியாது. ஆனால் சில விந்தைகள் மனிதனை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்கின்றன.

உதாரணமாக, அமெரிக்கா, ருஷ்யா, போன்ற நாடுகளின் அணுவாயுத உற்பத்தி உயிரினங்களின் அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்கின்றது எனலாம். விந்தைகள் என்னும் வரிசையில் உலகநாடுகள் பலவிதமான புதிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சி செய்துவருகின்றன.

முக்கியமாக தற்போது யாவுமே கணனிமயமாக்கப்பட்டு வருகின்றன. கணனி மூலமாக கோடிக்கணக்கான தரவுகளைப் பதிவுசெய்துவைக்க முடிகின்றது.

மேலும் முன்னைய காலகட்டத்தில் மனிதன் பறவையைக் கண்டான், விமானம் படைத்தான் என்று சொல்வார்கள். அதன்படியே இயற்கையின் ஒவ்வொரு செயலையும் கண்டறிந்த மனிதன் சிந்திக்கத் தொடங்கினான். ஆராய்ச்சியும் செய்தான். நியூட்டன் என்ற விஞ்ஞானி அப்பிள் மரத்தின்கீழ் இருக்கும்போது, அப்பிள் ஒன்று தரையில் விழுந்தது. அவர் அந்தக் கணத்திலிருந்தே சிந்திக்க ஆரம்பித்தார். இவரின் எண்ணக்கருவில் உருவாகியதே புவியீர்ப்புக் கோட்பாடாகும். இதேபோன்று தோமஸ் அல்வா எடிசன் என்பவர் மின்குமிழ் ஒளிர்வதைப்பற்றிக் கண்டுபிடித்தார். இவ்வரிசையில் நீர்மூழ்கிக்கப்பல், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி யாவுமே விஞ்ஞான வளர்ச்சியின் வியக்கத்தகு விந்தைகள் தான்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் கணனி இயந்திரமே முக்கியபங்கு வகிக்கின்றது. கணனி பற்றிய ஆராய்ச்சி மென்மேலும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டளவில் யாவுமே கணனிமயமாக்கப்பட்டு விடும் என்று நம்பப்படுகின்றது. மேலும் விண்வெளியில் கால்பதித்த மனிதன் இன்று விண்வெளியில் வீடுகட்டலாமா என்று ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றான். இவையாவும் வியக்கத்தகு நிகழ்வுகளே!

விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் விந்தையானவைதான் என்றாலும், இது மனிதனை அழிவுப்பாதைக்கும் இட்டுச்செல்லும் என்பதில் ஐயமே இல்லை.

**திருமதி இராஜேஸ்வரி யோகேந்திரராஜா**

தயங்குவோரும், அஞ்சுவோரும் இந்த உலகில் எந்த காரியத்தையும் செய்யமுடியாது! -சர்.வால்டர் ஸ்காட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களின் கடமை



எமது பிள்ளைகள் நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளாக வளரப் பெற்றோரின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். பெற்றோர்கள் தமது அன்பான வார்த்தைகளினால் பிள்ளைக ளுக்கு கல்வியோடு நல்ல பழக்கவழக்கங்களையும் கற்பித்தல் அவசியமானதொன்றா கும்.

பெற்றோர்களாகிய நாம், பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கு முன்பாக அவர்களின் அன்றைய தேவைக்குரிய பாடசாலை உபகரணங்களைக் கொண்டுசெல்கின்றார்களா என்பதை நாள்தோறும் கவனிக்க வேண்டும். அத்துடன் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந் ததும் அவர்களுக்குரிய வீட்டுப்படிப்பு நேரத்தில் அவர்கள் அன்றைய தினம் பாடசாலையில் என்ன செய்தார்கள் என்ன படிப்பித்தார்கள் என்பதைக் குழந்தைகளிடம் கேட்டறிய வேண்டும். பின்பு அவர்கள் தரப்பட்ட வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்து முடித்துவிட்டார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். முடிந்தால் அவர்களுக்கு உதவிகள் செய்யலாம்.

அந்நிய நாடுகளில் வாழும் நாம் நமது பிள்ளைகள் தமது தாய்மொழியாகிய தமிழை அக்கறை யோடு கற்க வழிகாட்டுதல் அவசியமாகும். இது அவர்கள் தாய்மொழியை மறக்காதிருக்க வழி வகுக்கும். ஒழுங்காகத் தமிழ் வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்புவது இதற்கு உதவிபுரியும். சிறுவயதிலேயே தமிழ் கற்கவேண்டுமென்ற ஆர்வத்தையும் ஏற்படுத்தி விடும்.

தற்போதைய சூழ்நிலையில் பிள்ளைகள் கல்வியிலும் பார்க்க தொலைக்காட்சியில் கூடிய கவனம் செலுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையே பிள்ளைகள் பார்க்க அனுமதித்து, ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது விரும்பத்தக்கது. பிள்ளைகளின் கல்விக்கு தொலைக்காட்சி இடையூறாக வந்துவிட நாமே இடமளிக்கலாமா ?

**திருமதி நந்தினி ஆனந்தராான்**
(உதவி ஆசிரியை )

மனிதன் பாதி, அவனது நோக்கங்கள் பாதி. -தாகூர்



குழந்தைகளே...
இந்தப்படங்களுக்கு
அழகாக வண்ணம் தீட்டி,
உங்கள் பெற்றோர்களிடம்
பரிசு ஒன்றை
பெற்றுக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பேசும் படங்கள்



ஒரு மாணவனுக்கு பரிசில் வழங்குவது முன்னாள் ஆசிரியை திருமதி. சுகுணா விவேகானந்தன், திருமதி. பிரேமலோஜினி



பாலர் மேற்பிரிவு மாணவர்களுடன் ஆசிரியை கிருஷ்ண பவானி சிறீதரன்.



(ஆண்டு 3) மாணவர்களுடன் ஆசிரியர் நாகேஸ்வரன்.



பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்கள் சிலர்.

எப்போதும் பிறரை ஊக்கப்படுத்தும் சொற்களையே பேசுங்கள். -ஸீவார்ட்ஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் படங்கள்



பாலர் கீழ்ப்பிரிவு
மாணவர்களுடன் ஆசிரியை
பத்மா ஜனதேவி தர்மராஜா



பாடசாலை
ஆசிரியர் குழு



பாலர்
ஆரம்பப்பிரிவு
மாணவர்களுடன் ஆசிரியை
யோகேஸ்வரி ஜெயக்குமார்.



பிள்ளைகளுக்காக
காத்திருக்கும் பெற்றோர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(ஆண்டு 4)
மாணவர்களுடன் ஆசிரியர்.
ஏ.ஜே.ஞானேந்திரன்.



பாலர் கீழ்ப்பிரிவு மாணவர்களுடன்
திருமதி. நந்தினி ஆனந்தராஜ்.



(ஆண்டு 1) மாணவர்களுடன்
திருமதி. பத்மினி இரவீந்திரன்.



பாடசாலையின்
ஆசிரியர்கள், அதிபர்
தயாபரனுடன்

மனிதனுடைய முழுத் திறமைகளின் வெளிப்பாடே உண்மையான கல்வியாகும். -காந்தியடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் படங்கள்




நிர்வாகசபை உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றிய திரு. மகேந்திரன், வீடியோ ஒளிப்பதிவாளருக்குப் பரிசில் வழங்குகின்றார். பக்கத்தில் நிற்பவர் பாரியார் மகேந்திரன்.






பாடசாலையின் முன்னாள் ஆசிரியை திருமதி ஈஸ்வரி உருத்ரமூர்த்தி பிள்ளைக்கு ஏடு தொடக்குகின்றார். (1993)



பெற்றோர் ஆசிரியர் கூட்டமொன்றின் போது... தலைமை தாங்கியவர் திருமதி பாபரா பிரை!



(ஆண்டு 2) மாணவர்களுடன் ஆசிரியை நந்தினி மனோகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆடற்கலையும் மாணவிகளும்

கலை என்பது மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அறிவையும், ஆற்றலையும் குறிக்கும். அதாவது செயல், திறமை, பயன், அழகு, சுவை எனும் அம்சங்களைக் கலைகளில் நாம் காண்கிறோம். மனித குலத்திற்குத் தேவையான அறிவின் அடித்தளத்தினின்றும் உருவான செயல்கள் யாவும் ஒரு காலத்தில் கலைகளாகக் கருதப்பட்டன. இந்த அடிப்படையில் கற்றுக் கொண்டு செய்யும் தொழில்கள் யாவும் கலைகள் எனில் மிகையாகாது.

கற்றல் என்பது வெறும் புத்தகக்கல்வி மட்டுமல்லாது, கண்களால் பார்த்து, மனதால் உணர்ந்து செய்ய முற்படும் தொழில்கள் யாவும் கலைகளே. இந்த உண்மையினை அடிப்படையாகக் கொண்டே கலைகள் அறுபத்து நான்கு என நமது முன்னோர்கள் வகுத்திருந்தனர்.

காலப்போக்கில் ஆடல், பாடல், சிற்பம், ஓவியம், இலக்கியம், கவிதை போன்ற அழகூட்டும், சுவைதரும் தொழில்களில் ஈடுபடுவோரே கலைஞர்கள் என வகுக்கப்பட்டனர்.

காலத்தோடு வளர்ந்து, கவின்மிக்க தனியொரு கலையாக விளங்கும் இன்றைய ஆடற்கலை எவ்வாறு தோன்றியது என வேத, சாஸ்திர நூல்களை ஆராயின்:
ஆதிகாலத்தில் மக்கள் மிகவும் துன்பத்தில் வாட, மக்களை சந்தோஷப்படுத்த ஏதாவது வழி வகுக்குமாறு இந்திரன் சிவபெருமானிடம் வேண்டி நின்றான். அதற்கிணங்க சிவபெருமான் பிரம்ம தேவரிடம் கூறி நாட்டியவேதம் என்னும் ஐந்தாவது வேதத்தைப் படைப்பித்தார். மேலும் பிரம்மா பரதமுனிவருக்குக் கற்பிக்க, அந்த முனிவரினதும் சீடர்களினதும் மூலம் தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்கும் கொண்டு வரப்பட்டு பரப்பப்பட்டது எனவும் கூறி பரதரால் பரப்பப்பட்டமையால் தான் பரதநாட்டியம் எனப் பெயர் பெற்றது என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மானிடவியல் அடிப்படையில் நோக்கின் மனிதக்குரங்கிலிருந்து கூர்ப்படைந்து புதிய இனமாக உருவாகிய ஆதிகால மனிதன் தேவையின் பொருட்டு மனித இனத்தில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும் ஆரம்பக்கட்டத்தில் கைகள், கண்கள் தொடர்பு சாதனமாக அமைந்தது. மறுபுறத்தில் மனிதனின் குரல்வளை சீர்பெற்று மெல்ல மெல்ல அர்த்தமுள்ள தெளிவான ஒலிகள் கிளப்ப அதற்கேற்ப கை, கால், கண் அசைவுகள் உருவாகின. முடிவில்லா ஆகாயத்தையும், அதன் அழகையும், இயற்கை மாற்றத்தையும் கண்டு மனிதன் திகைத்தான். பருவகாலங்களை உற்று நோக்கிய மனிதன் தனக்கு அப்பாற்பட்டு ஒரு சக்தி இருப்பதை உணர்ந்தான். தனது வாழ்வின் உணவு, உடை, உறையுள் என்பவற்றை இச்சக்தியே வழங்குவதாகக் கருதினான். இடி, மின்னல், சூறாவளி என்பவற்றைக் கண்டு அஞ்சிய மக்கள் இச்சக்தியை மகாவல்லமை பொருந்திய ஒருவனாகக் கொண்டு அச்சக்தியின் கோபத்தைத் தணிப்பதற்கும், தமது தேவைகளை வெளிப்படுத்துவதற்கும் படிப்படியாக விறுவிறுப்பாகவும், புதிய நுணுக்கங்களாகவும் ஆட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கினான்.

மக்களிடையே தொடர்பு சாதனமாக மொழி வளர்ச்சி பெறாத ஒரு காலகட்டத்தில் இளம்தலைமுறை-யினருக்கு தம்தொழிலை பாவனை செய்து ஆடும் ஆடல்கள் (மீன் பிடித்தல், வேட்டையாடுதல்)

எந்தச் சாதாரண மனிதனும் அற்புதங்களை நிகழ்த்திவிடலாம். அதற்குத் தேவை கடுமையான உழைப்பு. -தாமஸ் புல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் விளக்குதல், பயிற்சியளித்தல் முக்கிய முறையாகவும் கருதப்பட்டது. மக்களின் வாழ்வு உழைப்பினாலும், அறிவினாலும் முன்னேற்றமடைய இத்தகைய குழு ஆட்டங்கள் தமது பணியை இழந்து விடினும் சமுதாயத்தின் பண்பாட்டு எச்சங்களாக நினைவில் பரிணமித்து கிராமிய நடனங்களாயின.

5000 வருடங்களுக்கு முன் தோன்றியதாகக் கருதப்படும் பரதநாட்டியம் நடன வரலாற்றில் ஆரம்பத்தில் இதற்கென வைக்கப்பட்ட பெண்களால் கோவில் திருவிழாக்களிலும், அரச – சபைகளிலும் ஆடப்பட்டு வந்தது. தேவர் அடியார்கள் (தேவதாசிகள்) என அழைக்கப்பட்ட இப்பெண்கள் ஆடிய நடனம் முன்பு சுதிர், கூத்து என அழைக்கப்பட்டது.
காலத்தின் மாற்றத்தினால் இக்கலையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு, நாட்டியக்கச்சேரி ஒழுங்குமுறை செம்மைப்படுத்தப்பட்டு, சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய தஞ்சைச் சகோதரர் நால்வராலும் அதற்கு மேலும் இசைமெருகூட்டப்பட்டது.

சில சமூகச் சீர்கேட்டினால் பாதிப்பிற்குள்ளான இந்நடனம் கிருஷ்ண ஐயர், திருமதி ருக்மணி அருண்டேல் ஆகியோரின் அயராத முயற்சியாலும், ஊக்கத்தினாலும் புதிய பரிணாமம் பெற்று சிறந்த கலைவடிவாக பரதநாட்டியம் என உயிர்ப்பெற்றது. இக்காலகட்டத்தின் பின்பே இக்கலையை எல்லா அந்தஸ்துள்ள மக்களும் முன்வந்து கற்று சிறப்படையக்கூடிய நிலை ஏற்பட்டு நுண்கலைக் கல்லூரிகள் அமைய ஏதுவாக அமைந்து, இன்றுவரை மேன்மேலும் வளர்ச்சி பெற ஊன்றுகோலாக அமைந்தது.

இனி மாணவர்களின் பயிற்சிமுறையை நோக்கின்:
இக்கலைகள் குரு, சிஷ்யமுறையில் பக்தியுடனும் சிரத்தையுடனும் பயிலுதல் மிக உன்னத நிலையை அடைய வழிவகுக்கின்றது.

நடிப்பதும் ஆடுவதும் இழிவான செயலெனக் கருதுவோர் இன்னும் எம்மிடையே உள்ளனர். எமது சாஸ்திரங்களில் நாட்டியம் எனப்படுவது அறிவூட்டுவதற்கான ஒரு சாதனம் எனக் கூறப்படுவதை மனதில் நிறுத்தி, தமது பிள்ளைகள் சகல கலைகளிலும் முன்னோடியாகத் திகழவேண்டுமென ஆவல் கொண்ட பெற்றோர்கள் முதலில் தமது பிள்ளைகளுக்கு கற்றுத்தேர்ந்த நல்லதொரு ஆசிரியராகத் தேர்ந்தெடுத்தபின் பயிற்சி தொடங்க நல்லதொரு நாளையும், வேளையையும் நிச்சயித்துத் தொடங்குதல் வேண்டும்.

நமது நாட்டிக் கலைகள் வெறும் பொழுதுபோக்கிற்காகவோ, உடற்பயிற்சிக்காகவோ ஏற்பட்டவை-யல்ல. கலாச்சாரத்தின் அடிப்படையில் கலைகளும் அவைகளைக் கையாளும் முறைகளும் அமைந்திருக்கின்றன. கலாச்சாரத்தையும் சேர்த்துப் பயின்றால்தான் கலை பூரண வடிவம் பெறும். இத்தகைய பெருமைவாய்ந்த இக்கலைமரபினைப் பேணிக்காத்து, எம் ஆடல் வடிவமானது தனது பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்கள் சிதைந்து போகாமல் முறைப்படி பயின்று, இக்கலையானது மக்களின் பொழுதுபோக்கிற்கல்லாமல் அது மக்களை வழிப்படுத்தி நன்நெறிப்படுத்துவதற்கே பயன்படவேண்டுமென ஒவ்வொரு மாணவரும் மனதிற் கொண்டு செயற்படுதல் நன்றென்றாகும்.

"நாட்டியக் கலைமணி"
கிருஷ்ணபவானி ஸ்ரீதரன்
நடன ஆசிரியை

எங்கு துயரம் குடிகொண்டிருக்கிறதோ அங்குதான் புனிதத் தன்மையைக் காண்கிறோம்! -ஆஸ்கார் வைல்ட்.

ஆசிரியர்: ஆங்கிலேயன் கதைப்பது ஆங்கிலம், சிங்களவன் கதைப்பது சிங்களம், இந்தியன் கதைப்பது ஹிந்தி. அப்படியென்றால் தமிழன் கதைப்பது...?


மாணவன்: தமிழைத்தவிர மற்றப் பாஷையெல்லாம் கதைப்பான்.

ஆசிரியர்: ???!!!... (அகதியார்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னிய மண்ணில் அகதி வாழ்வு



அன்னிய மண்ணின் அகதி வாழ்வு என்னும் தலைப்பை நாம் கூர்ந்து பார்க்கும் போது எமது தாய்த்திருநாடாம் இலங்கையை, தமிழ் மண்ணின் பெருமையை நினைவு கொள்ளாமல் இருக்க முடியவில்லை. இன்று நம் தமிழ் இனம் அன்னியரால் அடக்கி ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, பனிபடர்ந்த மேலத்தேச நாடுகளை நோக்கிப் படையெடுத்த வண்ணம் இருக்கின்றது. நாம் வாழ்ந்த எமது தாய்மண்ணை விட்டு அகதிகளாகப் பல் வேறு நாடுகளுக்கும், நாளுக்கு நாள் அலை அலையாகச் சென்று கொண்டிருக்கும் எம் இனத்தவர்களின் நிலையை எண்ணி கண்ணீர் சிந்தாமல் எவராலும் இருக்க முடியாது. யாழ்ப்பாணம் என்றால் ஒரு குட்டிச் சிங்கப்பூர் என்று வர்ணித்த ஒரு காலம் முன்பிரு ந்தது. அங்கு ஓங்கிவளர்ந்து நிற்கும் தென்னை மரங்களும், பனை மரங்களும்இன்னும் பல அழகிய விருட்சங்களும் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு அழகு சேர்த்தவை. இன்றோ யாழ்ப்பாணம் தன் இயற்கை அழகை இழந்து சுடுகாடு போலாகி விட்டது. இங்குள்ளவ ர்கள் எல்லாம் தமது உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு இன்று நிம்மதியின்றி வாழ்கின்றார்கள். முடிந்தவர்கள் அங்கிருந்து தப்பி, வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் கோரி வருகின்றார்கள்.

அந்நிய நாடுகளில் வாழும் நம்மவர்கள் இங்கு பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி இருக்கின்றது. குறிப்பாக தமிழைத் தொடர்ந்து கற்பதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பாடசாலை, வேலை ஸ்தலங்கள் என்று எல்லாவற்றிலுமே அந்தந்த நாட்டு மொழிகளில் உரையாட வேண்டி வருவதால் , கற்ற தமிழையும் மறந்து விடும் அவலம் எம்மைச் சூழ்கின்றது.

இந்த நிலையில் இங்கொரு நல்ல தமிழ் பாடசாலை இயங்குவது நமக்குக் கிடைத்த ஒரு அதிஸ்டம் என்றே சொல்ல வேண்டும். படித்த தமிழை மறக்காமல் தொடர்ந்து இங்கு எனக்குப் படிக்கக் கிடைத்தது அரியதொரு வாய்ப்புத்தான்.

இப் பாடசாலையின் உயர்ந்த பணி சிறப்புடன் தொடர என் நல் வாழ்த்துக்கள்.

செல்வி முயாழினி

(பழைய மாணவி )

---

**சுவர்களைக் கட்டாதீர்கள். பாலங்களைக் கட்டுங்கள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐப்பசி-மார்கழி இதழ் பாசலில் உள்ள**
**அனைத்து கடைகளிலும் விற்பனையாகிறது!**

உலகுவாழ்
இளைஞருக்கான
இளைஞரின் இனிய
பிரசவம்!



# படித்து விட்டீர்களா?

# இளைஞன்

*உள்ளே...*

- திருமணம் கோழையாக்குமா?
- துள்ளி வருகுது வேல் தூரப் போ பகையே! (வண்ணை ஆனந்தன்)
- ஐரோப்பாவின் புதிய நாகரீக மோகம் உடல் துளை வளையங்கள்! (கற்கி)
- பாய்ச்சல் (காசிஆனந்தன்)
- ஐடியா ஐயாசாமி (ரவி செல்லத்துரை)
- தேன்கூடு (ஏ.ஜே.ஜி)
- ஐரோப்பாவில் தமிழர் மத்தியில் விவாகரத்துகள் ஏன்?

**இன்னும் பல விறுவிறுப்பான செய்திகளுடன்**
**இப்பொழுது விற்பனையாகிறது!**

**சுவிற்சலாந்து தொடர்புகளுக்கு:**
**ஏ.ஜே.ஞானேந்திரன்.**
PostFach, 118-4127 Birsfelden (BL)
SWITZERLAND-Tel: 061/ 3 11 25 44

**வாசகர்களிடமிருந்து ஆரோக்கியமான**
**ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**



ஆசிரியர்: ஓவியர் சேகர்.

---

கையிலெடுத்தால் பெருமை: படித்துப் பார்த்தால் அருமை!

கதைகளில் இனிமை: அரசியலில் நடுநிலை: செய்திகளில் சமுதாயப் பார்வை!

**இளைஞன்** | சந்தா படிவம்

இளைஞனைத் தேடி நீங்கள் செல்லத் தேவையில்லை. இளைஞன் இனி உங்களைத் தேடி வருவான்!

அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழே உள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து - அதற்கான பணத்தை காசோலையாகோ, தபால் கட்டளையாகவோ அல்லது கீழே உள்ள வங்கிக் கணக்கிற்கோ அனுப்பி வையுங்கள்.

உங்களுடைய
பெயர் ......................................
முகவரி ......................................
......................................
தொலைபேசி: ......................................

ஒருவருட சந்தா - (தபாற்செலவுடன்) சகல நாடுகளுக்கும் 15. மார்க் மட்டுமே!

**வங்கி இலக்கம்:**
R. JEYASEKARAN
Konto.Nr: 273022400
BLZ: 500 800 00
DRESDNER BNK
FRANKFURT/M

**முகவரி:**
"ELAIGNAN"
C/O - R. JEYASEKRAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany.
Tel: 0172 4189964

## குடும்பத்தோடு படித்து மகிழும் பத்திரிகை!

ஒவ்வொரு பக்கமும் ரசனை: ஒவ்வொரு வரியிலும் எளிமை!



இவர்களோடு ரங்கநாதன்.

ரவிசெல்லத்துரை + பொன்னலிங்கம் + இணுவையூர் சோதி

**விரைவில் வெளிவரவிருக்கிறது...**

உங்கள் சேகரின் நெறியாக்கத்தில்
புலம்பெயர் இளைஞர்கள்

# சிரிக்க சிந்திக்க

ஒரேயொரு விலை 2.50 டி.மா மட்டுமே!

**இது ஒரு 'இளைஞன்' வெளியீடு**

சிலோன் சின்னத்துரை: உனக்கு அடிக்கடி வயிறு எரியுது என்று டாக்டரிடம் போனியே.. இப்ப எப்படி?
ஐரோப்பா ஐயாத்துரை: டாக்டர் சொல்லிப் போட்டார்.. இந்த வயிற்றெரிச்சலுக்கு மருந்தே கிடையாதாம்!
சி.சி: ஏனாம்..?
ஐஐ: டாக்டர் கேட்டார்- எப்ப எப்ப உமக்கு வயிறு எரியுது என்று? அதற்கு நான் சொன்னேன்- எங்கட தமிழர் யாரும் நல்லா வந்திட்டாங்கள் என்று கேள்விப்பட்டால் என்று சொன்னேன்!
சி.சி: அது சரி... உந்த வயிற்றெரிச்சலுக்கு மருந்தே கிடையாதுதான்!

**கடந்த ஐந்து வருடங்களாக இளைஞனில் உங்களை சிந்திக்கவும், சிரிக்கவும் வைத்த சிறப்பான நகைச்சுவைத் துணுக்குகளே இந் நாடாவில் ஒலி வடிவம் பெறுகிறது!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க, வளர்க தமிழ்மொழி!



**பெ**ற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்ற வானிலும் நலி சிறந்தனவே என்ற முதுமொழிக்கமைய நாம் எங்கு வாழ்ந்தாலும் எமது மொழி, கலை, கலாச்சாரங்களைக் கற்க வேண்டும். எப்பொழுதுதாவது ஒருநாள் சொந்த நாட்டிற்கு திருப்பியனுப்பப்படுவோம் என்ற நிலையில், இங்கு எமது வாழ்க்கை ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. நமது தாய் மொழியை மறந்து விடுவோமோ, நமது இனம் அழிந்து விடுமோ என்ற பயம் எமக்கு அடிக்கடி வருவதுண்டு. பல வெளிநாடுகளில் சிதறி வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்பதிலேயே ஆர்வம் காட்டும்போது, காலப்போக்கில் இவர்கள் தமிழறிவு மோசமானதாகி விடும். இவர்கள் இந்தநாட்டு மொழியைக் கற்று, இங்கு வதிவிட அனுமதிப் பத்திரமும் பெற்றுவிட்டால், இங்குள்ள வெள்ளையர்கள் போலாகி விடுவோமென நம்மவர்களில் சிலர் நினைப்பது முழுத்தவறு. நாம் எப்பொழுதுமே அவர்கள் கண்களுக்கு அகதிகள்தான். நாம் இங்கு தமிழ் கற்பது மிகமிக அவசியம். ஜேர்மன் மொழியைச் சரிவரத் தெரியாததால் சில சமயங்களில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் உதவியினை நாடுகின்றோம் அல்லவா? இதேபோல தமிழை இங்கு அசட்டை செய்துவிட்டு, பிறிதொரு காலத்தில் நாடு திரும்புபவர்கள், சொந்த மண்ணில் ஒரு மொழிபெயர்ப்பாளருக்காக அலையவேண்டி நேரிடும். தமிழறிவை ஊட்ட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடு பாசலில் ஒரு நல்ல தமிழ் பாடசாலை இயங்கி வருவது எமது பாக்கியமே. இப்பாடசாலையின் மழைய மாணவியென்ற முறையில், இத் தருணம் அப்பாடசாலை வளர்ச்சி வேண்டி இறைவனிடம் வேண்டி நிற்கின்றேன்.



**செல்வி. குபோஜினி மகேந்திரன்**
(பழைய மாணவி)

**“நிமிர்ந்து நில்! நிலவு உனக்கு நெற்றிப் பொட்டிடும்!”**

Layout Artist: SEGAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்தும் இல்லாதவர்கள்





இன்று உலகெங்கும் பரந்து வாழும் தமிழினம் ஏதோ ஒரு நிகழ்வின் மூலம் தங்களை தமிழர்கள் என்று இனம் காட்டிக்கொண்டு, பண்பாடு கலாச்சாரங்களைப் போற்றி வளர்த்துக்கொண்டும் வாழ்கின்றனர். இன்னும் சிலரோ தங்களை தமிழர்கள் என்று கூறுவதற்கே வெட்கப்படுகின்றனர்.

இந்த இரு துருவத்தினாலும் வெட்கப்படுவோரை எடுத்து நோக்குவோமெனில் இவர்களில் வரட்டுக் கௌரவத்திற்கு இலக்காகி அழிந்து போவது இளம் சமுதாயத்தினரே. இதற்கு இவர்கள் கூறும் காரணம் தாங்கள் இந்நாட்டவரைப்போல் வாழ்கின்றோம் என்பதே. இந்நாட்டவரைப்போல் வாழுங்கள், நான் வேண்டாம் என்று கூறவில்லை. ஏன் அவர்களிடம் உள்ள நல்ல பழக்கவழக்கங்களை விட்டுவிட்டு கெட்டதை மட்டும் எடுத்துக்கொள்கிறீர்கள்!

"கானமயில் ஆட, கண்டிருந்த வான்கோழி- தானும் அதுவாகப் பாவித்து- தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே கல்லாதான் கற்ற கவி"

என்று அவ்வையார் மூதுரையில் கூறியதுபோல்தான் இவர்களின் செயலும்!

இறுதியில் இவர்கள் தங்களது கலை கலாச்சாரத்தையும் மறந்து, இந்நாட்டவரின் பழக்க வழக்கங்களையும் மறந்து, உறவுகள் இருந்தும், இல்லாத அனாதைகள் போல் வாழப்போகின்றார்கள்.

இப்படி உறவுகள் இருந்தும் இல்லாத நிலைக்கு இன்றைய இளைஞர்கள் தள்ளப்படுவதற்கு பெற்றோர்களே பெரிதும் காரணமாகிறார்கள்.

உதாரணத்திற்கு- பெண் பிள்ளைகளை நாட்டியம் மற்றும் பிற கலைகளைப் பயில வைப்பது போல, ஆண் பிள்ளைகளையும் ஏதாவதொரு கலையில் ஈடுபடுத்தலாம். இப்படி ஈடுபடுத்துவதன் மூலம் எமது கலைகளையும் வளர்க்கலாம். பிள்ளைகளும் திருந்தலாம்.

"வெளிநாட்டவரைப்போல்தான் வாழ்வோம் எமது கலைகள் எதற்கு?" என்பவர்களுக்கு கணனி கற்பிக்கலாம். கணனி பயிற்றுவிப்பதன் மூலம், இதோ மலர்ந்து கொண்டிருக்கும் 21 ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதைவிடுத்து பிள்ளைகள் கெட்டுப்போகிறார்கள் கெட்டுப்போகிறார்கள் என்று புலம்பினால் என்ன அர்த்தம்?

இளைஞர்களே! நாங்கள் இந்தநாட்டில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தவர்கள். இந்த நாடு ஒரு போதும் எமக்குச் சொந்தம் இல்லை. நாம் என்றோ ஒருநாள் இந்த நாட்டைவிட்டுத் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்கள். எனவே நாம் இங்கு ஏதாவது ஒரு துறையில் சிறந்து விளங்கினால்தான் நமக்கு பெருமை. நம் பெற்றோருக்கும் பெருமை. நாம் பிறந்த தாய்நாட்டிற்கும் பெருமை.

நன்றி!

அன்புடன்

**பரிமளநாதன் மயூரன்.** (பழைய மாணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ. அரவிந்தன்
7 - வயது



## கமக்காரன்

கந்தன் நல்ல கமக்காரன்
காய்கறித் தோட்டம் செய்திடுவான்
கனி மரங்கள் நாட்டிடுவான்
கால் வாக வளர்த்திடுவான்
காவல் நன்றாய்க் காத்திடுவான்
காசு பணமும் சேர்த்திடுவான்
வீடு கட்டி வாழ்ந்திடுவான்
வித்தை மிகவும் கற்றிடுவான்.
- கந்தன் நல்ல

---

ஜனார்த்தனன் வயது - 8




## அணில்

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா
பாதிப் பழம் உன்னிடம்
பாதிப் பழம் என்னிடம்
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

வெற்றிபெறவேண்டும் என்ற திடமான எண்ணம்தான் வேறு எந்த காரியத்தையும் விட மிக முக்கியமானது. -ஆபிரகாம்லிங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எனது விருப்பமான பறவை



மயில் ஒரு அழகான பறவை. மயிலில் பல நிறங்கள் உண்டு. மயிலுக்கு இரண்டு இறக்கைகள் உண்டு. முருகனுடைய வாகனம் மயிலாகும். மயில் காட்டில் வசிக்கின்றது. மயில் பாம்பைப் பிடித்துத் தின்னும். ஆண் மயில் தோகையை விரித்து நடனமாடும். மயில் செட்டையை அடித்துப் பறக்கும். மயில் முட்டையிடும். இந்துக் கோவில்களில் மயில்களைக் காணலாம். காட்டுப் பறவையான மயிலே எனக்கு மிகவும் விருப்பமான பறவையாகும்.


**கோபிநாத் செல்வயோகநாதன்**
ஆண்டு 1



## என்னைப் பற்றி...

எனது பெயர் அஜிதா. எனது வயது ஏழு. எனது அப்பாவின் பெயர் புவனேந்திரன். எனது அம்மாவின் பெயர் சசி. நான் பாசல் தமிழ்ப் பாடசாலையில் முதலாம் வகுப்பில் படிக்கின்றேன். எனது ஆசிரியையின் பெயர் பத்மினி. எனக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. அக்காவின் பெயர் அனாமிகா. அண்ணாவின் பெயர் அனோஜ்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் !






வரலாற்றைப் படிப்பது நன்று.
ஆனால், வரலாறு படைப்பது
அதைவிட மிக மேன்மையானது.
-நேரு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நான் விரும்பும் நடனம்.

நான் விரும்பும் நடனம் பரத நாட்டியமாகும். இது இந்தியாவில் தோன்றியது. இந்த நடனத்திற்குரிய கடவுள் நடராஜப் பெருமானாவார். பரத நடனத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் பூமாதேவிக்கு நமஸ்காரம் செய்வர். இதில் அலரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனம், தில்லானா ஆகிய உருப்படிகள் உள்ளன. நான் இக்கலையை மிகவும் விரும்புகின்றேன். நான் இக்கலையை ஆசிரியை திருமதி கிருஷ்ணபவானியிடம் கடந்த இரண்டு வருடங்களாகப் பழகிவருகின்றேன்.
வாழ்க கலை ! வளர்க பரதம் !

**விஜிதா நடராசா**
ஆண்டு 1





## என் கதை

என் பெயர் ஜிந்தா. எனக்கு இப்பொழுது பத்து வயதாகின்றது. என் பிறந்த திகதி 25 – 11 – 88. இலங்கையில் யாழ்ப்பாணத்தில் பிறந்த நான் , இப்பொழுது சுவிற்சிலாந்து நாட்டிலுள்ள பாசல் என்னும் நகரில் பெற்றோருடனும் தம்பியுடனும் வாழ்ந்து வருகின்றேன்.
எனது அப்பாவின் பெயர் தவராசா. எனது அம்மாவின் பெயர் ரஞ்சி. தம்பியின் பெயர் ஜின்சன்.
இங்குள்ள தமிழ்ப் பாடசாலையில் நான் ஆண்டு இரண்டில் படித்து வருகின்றேன்.
நான் தினமும் காலையில் கடவுளை வணங்குகின்றேன். எனக்கு வெள்ளை நிறம் மிகவும் பிடிக்கும். விருப்பமான பூ செவ்வந்திப்பூ. நான் விரும்பிச் சாப்பிடும் பழம் அன்னாசிப் பழம்.
நான் பாடசாலையில் கவனமாகப் படித்து வருகின்றேன்.

செல்வி ஜிந்தா தவராசா
ஆண்டு 2

---

சிந்தித்தால் மட்டும் போதாது.
சிந்தனையை செயல்படுத்தவும் வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## என்னைப் பற்றி..

எனது பெயர் ஜனனி. என் சொந்த ஊர் யாழ்ப்பாணமாகும்.எனது அப்பாவின் பெயர் சுப்பிரமணியம். அம்மாவின் பெயர் பிரேமகுமாரி. என் தம்பியின் பெயர் ஜானிக். எனக்கு மிகவும் பிடித்த நிறம் சிவப்பாகும்.. எனக்கு வயது எட்டு. எனது சொந்த ஊர் யாழ்ப்பாணமாகும்.
எனக்கு சுறாக்கறியுடன் சோறு சாப்பிடப் பிடிக்கும். பலாப்பழம் எனக்கு மிகவும் பிடித்த பழமாகும். நான் அதிகம் விரும்பும் பூ ரோசாப்பூ.
நான் பாசலிலுள்ள தமிழ் பாடசாலையில் ஆண்டு இரண்டில் படிக்கின்றேன்.புதன் கிழமைகளில் தமிழ் வகுப்புகளுக்குப் போய்வருவேன்.
மாலையில் தம்பியுடன் விளையாடுவேன்.சிநேகிதிகளோடும் விளையாடுவேன்.

**செல்வி ஜனனி சுப்பிரமணியம்**
ஆண்டு 2





## நான்

என் பெயர் கீர்த்திகன். ஏனது நாடு இலங்கை.என் அப்பாவின் பெயர் சோமசுந்த ரம். அம்மாவின் பெயர் பாமா. எனக்கு இப்பொழுது பன்னிரண்டு வயதாகின்றது. சுவிஸ் ஜேர்மன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் படிக்கின்றேன். இங்குள்ள தமிழ் பாடசாலையில் இரண்டாம் ஆண்டில் படிக்கின்றேன்.
நீல நிறம் எனக்குப் பிடிக்கும். கூடைப் பந்தாட்டம் எனக்குப் பிடித்த விளையாட்டாகும்.கதைப் புத்தகங்கள் வாசிக்கவும் எனக்குப் பிடிக்கும்.
எனது அப்பா இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் வேலைசெய்கின்றார். எனக்கு இரு தம்பிமார்கள் இருக்கின்றார்கள். எட்டு வயதுத் தம்பியின் பெயர் கலாதன். மற்றத் தம்பியின் வயது இரண்டு. இவர் வயது இரண்டு. நான் என் பெற்றோரையும் தம்பிமாரையும் மிகவும் நேசிக்கின்றேன்.

**செல்வன் கீர்த்திகன் கிருஷ்ணபிள்ளை**
ஆண்டு 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## எனது குடும்பம்


எனது அப்பாவின் பெயர் சிறிறங்கநாதன். எனது அம்மாவின் பெயர் லலிதா. நாங்கள் சுவிற்சர்லாந்தில் பாசல் என்னும் மாநிலத்தில் வசிக்கின்றோம். எனது அப்பா போசனசாலையில் வேலை செய்கிறார்.

எனது பெயர் ஜனனி. எனக்கு இரண்டு தங்கைகள் உண்டு. அவர்களின் பெயர் கயனி, நிலானி. நாங்கள் கடவுளை வணங்குவதுபோல் எங்கள் பெற்றோரையும் மதிக்க வேண்டும். எனது பெற்றோர் சாப்பாட்டிலும், விளையாட்டிலும், படிப்பிலும் மிகவும் கவனம் செலுத்துவார்கள். நாங்கள் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கீழ்பணிந்து நடக்க வேண்டும். அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்.

ஜனனி ஸ்ரீரங்கநாதன்
ஆண்டு 3

## எனக்கு சிறகு முளைத்தால்.....

சிறகு முளைத்தால் எமக்கு விரும்பிய இடங்களுக்கெல்லாம் பறந்துசெல்ல முடியும். எனக்கும் சிறகுகள் முளைத்தால், உற்சாகமாக பறந்துதிரிய முடியும்.
வெவ்வேறு நாடுகளுக்குப் பறந்து சென்று, அவர்களது வித்தியாசமான உடை, நடை பாவனைகளைக் கண்டு களிக்க முடியும். பல்வேறு நாடுகளிலுள்ள உயர்ந்த மலைகள், ஆறுகள் என்பனவற்றை என்னால் கண்டு ரசிக்க வேண்டும். உயரமாக எழுப்பப்பட்டுள்ள அழகிய பல மாடிக்கட்டிடங்களையும் பார்க்க முடியும்.
இப்படிப் பறந்து திரியும் போது, உலகின் பல நாடுகளில் இடம்-பெற்றுக்கொண்டிருக்கும் யுத்தங்களையும் என்னால் பார்க்க நேரிடும். அநியாயமாக மனிதர்களே மனிதர்களை கொல்கின்றார்கள் என்ற கவலைதான் ஏற்படும்.






தினேஷ் ரவீந்திரன்
ஆண்டு 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நான் சென்ற மிருகக்காட்சிசாலை


நான் எனது பெற்றோருடனும் அக்காவுடனும் தம்பியுடனும் அண்மையில் மிருகக்காட்சிசாலைக்குச் சென்றிருந்தேன். பாசலிலுள்ள இந்த மிருகக்கா ட்சிசாலை மிகவும் பெரியது மாத்திரமல்ல ஏராளமான மிருகங்களையும் கொண்டுள்ளது.

முதலில் கண்ணாடிப் பெட்டிக்குளலிருந்த அழகிய மீன்களையும் பாம்புகளைப் பார்த்தேன்.

எனக்குப் பயமாக இருந்தது. நீர்யானை, கரடி, புலி, சிங்கம் போன்ற பல காட்டு மிருகங்களைப் பார்த்தபோது எனக்குச் சந்தோஷமாக இருந் தது. இலங்கை யானையையும் இங்கு கண்டேன். அங்கு கூட்டமாகத் திரிந்த குரங்குகளின் சேஷ்டைகளைப் பார்த்தபோது எனக்குச் சிரிப்பாக இருந்தது. கழுகு, ஆந்தை, அழகிய பஞ்சவர்ணக் கிளிகள் என்று பல பற வைகள் இங்கே காணப்படுகின்றன.

இப்படி நான்குமணி நேரம் இங்கே சுற்றித் திரிந்துவிட்டு , மாலையில் வீடு திரும்பினோம்.

கஜீபா ஈஸ்வரபாலன்
ஆண்டு 3





## எனக்குப் பிடித்த செல்லப்பிராணி

பல மிருகங்கள் வீட்டு மிருகங்களாக வளர்க்கப்படுகின்றன. பசு, பூனை, நாய் போன்ற மிருகங்கள் மக்களால் விரும்பி வளர்க்கப்படுகின்றன. தாம் வளர்க்கும் மிருகங்களுக்கு ஆசையோடு, தாம் விரும்பிய பெயர்களையிட்டு அழைப்பார்கள். எனக்குப் பிடித்த செல்லப்பிராணி பூனையாகும். அதற்கு நான் மணி என்று பெயரிட்டுள்ளேன். அது ஓர் ஆண் பூனை. மிகவும் அழகானது. எல்லாப் பூனை களிலும் மணிதான் அழகான பூனை போல் எனக்குத் தோன்றுகின்றது.

மணி, பால், மீன், இறைச்சி போன்றவற்றை விரும்பி உண்ணும். இடையிடையே குறும்புகளும் செய்யும். தனது வாலைத் தானே பிடிக்க முயலும். அப்பொழுது நான் வாய்விட்டுச் சிரிப்பேன். மணிக்கு என்னோடுதான் உறங்கப் பிடிக்கும். என்றென்றும் மணிதான் என் செல்லப்பிராணி.

காஞ்சனா மனோகரராசா
ஆண்டு 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## எனது நண்பன்.

ஏனது நண்பனின் பெயர் டிலான். அவன் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள நவாலி என்னும் கிராமத்தில் வசித்து வருகின்றான். அவனும் நானும் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு நான்குவரை ஒன்றாகக் கல்வி பயின்றோம். மாலை வகுப்புகளுக்கு நாம் இருவரும் ஒன்றாகவே போவோம்.மாலை நேரங்களில் நானும் அவனும் ஒன்றாகச் சேர்ந்து வேறு சிறுவர்களோடு விளையாடு வோம். இப்பொழுது அவனைப் பிரிந்து நான் சுவிட்சிலாந்து நாட்டுக்கு வந்துவிட் டேன். அப்படியிருந்தும் ஒவ்வொரு மாதமும் அவன் எனக்கு ஒழுங்காகக் கடிதம் அனுப்புவான்.நானும் ஒழுங்காகப் பதிலனுப்பி வருகின்றேன்.
என் கடிதங்களைப் படித்துவிட்டு அவனுக்கும் இந்நாட்டைப் பார்க்க ஆசையாக இருப்பதாகத் தன் கடிதத்தில் எழுதுவான். அவன் தன் கடிதத்தில் எமது நாட்டு யுத்தத்தைப் பற்றி விரிவாக எழுதுவான். அதைப்படித்துவிட்டு நான் கவலைப்படுவ துண்டு. இப்பொழுது எனக்கு அவனைச் சந்திக்க மிகவும் ஆசையாக இருக்கின்றது.

செல்வன் துஷ்யந்தன் அருள்ராஜா

ஆண்டு 4






## நான் விரும்பும் செல்லப் பிராணி

பல மிருகங்கள் வீட்டு மிருகங்களாகவும் காட்டு மிருகங்களாகவும் வாழ்கின்றன. நாய் வீட்டு மிருகங்களுக்குள் நன்றியுள்ள மிருகமாகும்.
பல வீடுகளில் நாயை மக்கள் தமது பிள்ளைகள்போல வளர்க்கின்றனர். நாய் ஒரு நல்ல காவல்காரன் என்பதால் பலர் அதை விரும்பி வளர்க்கின்றார்கள்.
நாய்கள் பல நிறங்களிலும், பல உருவங்களிலும், பல இனங்களிலும் உள்ளன.
நாய், இறைச்சியை விரும்பி உண்ணும். பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் நாய் இறைச்சியை விரும்பி உண்பார்கள். அரபு நாட்டு மக்களுக்கு நாய் வளர்க்கப் பிடிப்பதில்லை. நாய்க்கு நல்ல பயிற்சி அளித்தால், அது தனது மோப்ப சக்தியால், திருடர்களைப் பிடிக்க உதவும். நாயோடு அன்பாக இருந்தால் அதுவும் எம்மோடு அன்பாக இருக்கும். நாயை நாம் துன்புறுத்தவே கூடாது. நாயை மட்டுமில்லை, நாம் வாயில்லாத ஜீவன்கள் எதையுமே துன்புறுத்தக் கூடாது.

அனித்தா சிவகுமார்

ஆண்டு 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பார்வையில்...



தமிழ்ப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்.

## 1992

ஆசிரியர்கள்: திருமதிகள் ஈஸ்வரி உருத்திரமூர்த்தி
சுகுணா விவேகானந்தன்
திரு பொன்னையா நாகேஸ்வரன்

மாணவர்கள் :

புவிராஜசிங்கம் மோகன்
புவிராஜசிங்கம் மதன்
பிரியா புவிராஜசிங்கம்
சுஜீத்தா உருத்திரமூர்த்தி
பிரதீப் உருத்திரமூர்த்தி
சண் உருத்திரமூர்த்தி
கவிதா வினாசித்தம்பி
பாஸ்கர் வினாசித்தம்பி
வினோத் வினாசித்தம்பி
சிறிவித்யா சிறிதரன்

ஞானகுமார் கார்த்திக்
ஞானகுமார் பிரதீப்
துவாரகா விசுவலிங்கம்
பரிமளநாதன் மயூரன்
கௌதினி பரிமளநாதன்
ஜனனி மகேந்திரன்
குபோஜினி மகேந்திரன்
றீகனா மகேந்திரன்
நிரூபா கணேசமூர்த்தி
றஜீபா கணேசமூர்த்தி
கஜானி சாந்தமூர்த்தி
அனுந்தினி இராமலிங்கம்
தர்சினி இராமலிங்கம்
பிரதீபன் இராமலிங்கம்
ஜெனித்தா தயாபரன்
விஜித்தா தயாபரன்
பிருந்தா தியாகராஜா

நித்தியா கனகலிங்கம்
நிதர்சன் கனகலிங்கம்
யூடிற் பாமினி புஸ்பாகரன்

சங்கீதா தில்லையம்பலம்
சிவகீர்த்தி தில்லையம்பலம்
தேவமதுரா தில்லையம்பலம்
பர்மிளா இராஜதுரை
கஜீபன் விஜயானந்தன்
மதுரா விஜயானந்தன்
துவாரகன் விஜயானந்தன்

## 1993

1992 இல் சேவையாற்றிய அனைத்து ஆசிரியர்களும் தொடர்ந்து 1993 இலும் தமது சேவையைத் தொடர்ந்தார்கள். 1992 இல் கல்விபயின்ற மாணவர்களுடன் இந்த ஆண்டில் புதிதாக இணைந்து கொண்டவர்கள் வருமாறு:

ஜனனி நடராசலிங்கம்
பிருந்தாபன் பரமசாமி
சுலக்ஷன் ஐயாத்துரை
தினேஷ் இரவீந்திரன்
கார்த்திகா கணேசலிங்கம்
சோபிகா கணேசலிங்கம்
அன்ரன்ராஜ் தாமோதரம்பிள்ளை
துவாரகா பரமநாதன்
லாவண்யா தயாளன்

## 1994

இந்த ஆண்டிலும், கடந்த ஆண்டின் ஆசிரியர்கள் தமது பணியைத் தொடர்ந்தார்கள். புதிதாகப் பல மாணவர்கள் வந்து இணைந்து கொண்டார்கள். பெயர்கள்:

கபிலன் தம்பு
நிதிலா நித்தியானந்தன்
துளசி கிருஷ்ணபிள்ளை
முரளி கிருஷ்ணபிள்ளை
ஜிந்தா தவராசா
அனோஜ் புவனேந்திரன்
அனாமிகா புவனேந்திரன்
பிரபாஸ் மகேஸ்
வனித்தா மகேஸ்
பிரதீபன் மகேஸ்
துசாந்தினி தர்மராசா
ஆதவன் விவேகானந்தன்
றொமினி சிவசுந்தரலிங்கம்
கஜேந்திரன் சிவசுந்தரலிங்கம்
அமுதராஜ் செல்வராசா
அமுதகலா செல்வராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயராஜ் செல்வராசா
சுரேக்கா சிவப்பிரகாசம்
துஷ்யந்தினி மகேந்திரன்
சிந்துஜா மகேந்திரன்
வெங்கட் திருநாதன்
பிருந்தா சிவலிங்கம்
ஜான்சி சிவலிங்கம்
நர்த்தனன் சிவராமலிங்கம்
மிலோனி இரவிமோகன்
எல்விஸ் சவேரியாப்பிள்ளை
பிரசன்னன் கணேசலிங்கம்
மதுரா தர்மராசா

# 1995

ஆசிரியர்கள் விபரம்:

திருமதிகள்:

செல்வி

திரு

சுகுணா விவேகானந்தன்
கிருஷ்ணபவானி சிறீதரன்
நந்தினி அரசரத்தினம்
வத்சலகுமாரி சந்திரகுமார்
ஜனனி மகேந்திரன்
பொ. நாகேஸ்வரன்

இந்த ஆண்டின் புதிய மாணவர்கள்:

ஆரூரன் ஆனந்தரான்
சிவகுமார் சுப்பிரமணியம்
கபில் சுந்தரலிங்கம்
தர்சனா செல்வரத்தினம்
சிந்துஜா கைலயம்பதி
சாருகா கைலயம்பதி
கோடீஸ்வரன் சண்முகம்
காஞ்சனா மனோகராஜா
துசி தியாகராசா
ஜெசி தியாகராசா
அனோஜன் ஜெயபாலன்
பிரின்சியா இரவீந்திரன்
சிறீதரன் தயாபரன்
ஜான்சி யோகசிங்கம்
கேதீஸ்குமார் சின்னத்துரை
யாழினி முருகையா
கோகுலன் முருகையா
யதுகுலன் முருகையா
கிருஷ்ணகுமார் சந்திரகுமார்
திருப்பதி இராஜநாயகம்
சங்கீதா இராஜநாயகம்
பிரகாஸ் விவேகானந்தன்
அனித்தா சிவகுமார்
சிந்துஜா நந்தகுமார்

றஜீபன் நந்தகுமார்
கமலதர்சினி வசீகரன்
லக்ஷதன் செல்வரத்னம்
றஜீவன் நகுலேஸ்வரன்
வத்சலா நகுலேஸ்வரன்
எல்விஸ் இராஜரட்ணம்
ரதீஸ் ரவீந்திரன்
றஜீபன் குணம்
கருணாகரன் செல்வரட்ணம்

# 1996

ஆசிரியர்கள் விபரம்:

திருமதிகள்:

சுகுணா விவேகானந்தன்
கிருஷ்ணபவானி சிறிதரன்
மாலதி குகதாஸ்
பிறேமலோஜினி அகுஸ்ரின்
ஜோண்சன் றிச்சார்ட்
நந்தினி மனோரதன்
பத்மாஜனதேவி தர்மராசா

பொ. நாகேஸ்வரன்

திரு

புதிய மாணவர்கள் விபரம் :

நிருஜா செல்வரத்தினம்
லவிந்தன் சபாரத்தினம்
தனூஜா தர்மசீலன்
சுபிதா சுரேந்திரன
மயூரி சிவநாதன்
செல்வேந்திரா செல்வரட்ணம்
சிவதாசன் யோகலிங்கம்
ஜனனி சிறீரங்கநாதன்
கஜனி சிறீரங்கநாதன்
துருபன் துர்சாதனன
சதீசன் கணேஸ்
சுரேக்கா கணேஸ்
பிரசாந்தினி கணேசமூர்த்தி
சகானா செல்வராஜா
றெசில்டா கலிசியஸ்
கஜீபா ஈஸ்வரபாலன்
ஜசிந்தன் ஈஸ்வரபாலன்
கீர்த்திகா நவரட்னம்
சுவித்தா சிவதாசன்
சுபந்தியா சிவதாசன்
பவ்யா சந்திரகுமார்
தினேஸ்குமார் ஞானசேகரம்
கீர்த்திகா ஞானசேகரம்
ஜனார்த்தன் ஜெகதீஸ்வரன்
பிரசாந் செல்வராஜா
ஷாமிதா கார்த்திகேசு

டிலானி சர்வேஸ்வரன்
பவந் கமலநாதன்
புரஞ்சயன் மனோரதன்
நளிலை மனோரதன்
அரபி இராசா
கலியுகன் சின்னத்தம்பி
கொன்ஸ்ரன் பிரான்சிஸ்
திசாந் தியாகராஜா
நிஜிதா அற்புதரத்தினம்
கிருஷாந் கனகராஜா
அதர்ஷான் கனகராஜா
நிருஜா சிவானந்தராஜா

# 1997

இந்த ஆண்டின் ஆசிரியர்கள்:

திருமதிகள்:

கிருஷ்ணபவானி சிறீதரன்
நந்தினி மனோரதன்
பத்மாஜனதேவி தர்மராஜா
யோகேஸ்வரி ஜெயக்குமார்
பத்மினி இரவீந்திரன்

செல்வி

யூடித் புஸ்பாகரன்

திருவாளர்கள்

பொ.நாகேஸ்வரன்
ஏ.ஜே.ஞானேந்திரன்

புதிய மாணவர்கள்

கீர்த்திகன் சோமசுந்தரம்
கலாதன் சோமசுந்தரம்
நிரோஜன் வரதராஜன்
திலக்ஷன் திரவியநாதன்
திவாகரன் திருஷாந்தினி
அசோக் சிறீஸ்கந்தராஜா
ஜெசிந்தா சோமசேகரம்
அபினா அழகேஸ்வரன்
நிரோஜினி சிறீதரன்
கோபிநாத் செல்வயோகநாதன்
கோபிகீதன் செல்வயோகநாதன்
காயத்திரி செல்வயோகநாதன்
அரவிந்தன் யோகேந்திரராஜா
மதுரா தியாகராஜா
கபிலன் தியாகராஜா
ஜனனி நாகராசு
பானுஜா பாஸ்கரன்
அகிலன் அருணகிரிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஜாறா அருள்ராஜா
துஷ்யந்தன் அருள்ராஜா
மிதிலா சற்குணம்
துதர்சன் நடராஜா
விஜிதா நடராஜா
மரிஸ்ரன் தோமஸ் பெர்னாண்டோ
சதீனா பொன்னம்பலம்
கோபிதாசன் பொன்னம்பலம்
யோசலின் சிங்கராசா
சுர்மினி விசுவரட்னம்
ரஷ்மி அன்னலிங்கம்

# 1998

நடப்பு ஆண்டின் ஆசிரியர்கள்.
திருமதிகள்:

கிருஷ்ணபவானி சிறிதரன்
நந்தினி மனோரதன்
பத்மாஜனதேவி தர்மராஜா
யோகேஸவரி ஜெயக்குமார்
பத்மினி இரவீந்திரன்

திருவாளர்கள்:

பொ. நாகேஸ்வரன்
ஏ.ஜே.ஞானேந்திரன்

உதவி ஆசிரியர்கள்.
திருமதிகள்:

சந்திரலீலா மனோகரராஜா
நந்தினி ஆனந்தரான்
மனோகரி சுப்ரமணியம்
இராஜேஸ்வரி யோகேந்திரராஜா

இந்த ஆண்டின் முழு மாணவர்களினதும் பெயர் விபரங்கள்:

கௌதினி பரிமளநாதன்
மதுசன் பரிமளநாதன்
மயூரன் தயாபரன்
மதுரா விஜயானந்தன்
துவாரகன் விஜயானந்தன்
பிருந்தாபன் தில்லைநாதன்
சுலக்ஷன் சிவசுந்தரம்
பிரசன்னா சிவசுந்தரம்
தினேஷ் இரவீந்திரன்
ராகேஷ் இரவீந்திரன்
ஜிந்தா தவராசா
ஜன்சன் தவராசா
அனாமிகா புவனேந்திரன்
அனோஜ் புவனேந்திரன்
அஜித்தா புவனேந்திரன்
வனிதா மகேஸ்
பிரதீபன் மகேஸ்
விஜயராஜ் செல்வராஜா
கௌதமன் செல்வராஜா
நர்த்தனன் சிவராமலிங்கம்
மதுரா தர்மராஜா
சஞ்சீவ் தர்மராஜா
ஆரூரன் ஆனந்தரான்
அஜந்தன் ஆனந்தரான்
தர்சனா செல்வரட்னம்
செல்வேந்திரா செல்வரட்னம்
காஞ்சனா மனோகரராஜா
பிரின்சியா இரவீந்திரன்
பிரியந் இரவீந்திரன்
சிறிதரன் தயாபரன்
கேதீஸ்குமார் சின்னத்துரை
பாமினி சின்னத்துரை
கஜீஸ்குமார் சின்னத்துரை
சதீஸ்குமார் சின்னத்துரை
கோகுலன் முருகையா
யதுகுலன் முருகையா
பிரகாஸ் விவேகானந்தன்
அனித்தா சிவகுமார்
கமலதர்சினி வசீகரன்
றஜீஸ்வரன் நகுலேஸ்வரன்
வத்சலா நகுலேஸ்வரன்
றஜீபன் குணம்
நிருஜா செல்வரட்னம்
லவிந்தன் சபாரத்தினம்
தனுஜா தர்மசீலன்
சுபித்தா சுரேந்திரன்
மயூரி சிவநாதன்
மயானி சிவநாதன்
சிவதாசன் யோகலிங்கம்
ஜனனி சிறிரங்கநாதன்
கஜனி சிறிரங்கநாதன்
சதீசன் கணேஸ்
சுரேக்கா கணேஸ்
பிரசாந்தினி ஞானமூர்த்தி
சகானா செல்வராஜா
கீர்த்திகா செல்வராஜா
சஞ்சீவன் யோகராஜா
நிருஜினி யோகராஜா
கோபிநாத் செல்வயோகநாதன்
கோபிகீதன் செல்வ யோகநாதன்
கீர்த்திகா செல்வயோகநாதன்
அரவிந்தன் யோகேந்திரராஜா
மதுரா தியாகராஜா
கபிலன் தியாகராஜா
ஜனனி நாகராஜா
பானுஜா பாஸ்கரன்
அகிலன் அருணகிரிநாதன்
துஜாரா அருள்ராஜா
துஷ்யந்தன் அருள்ராஜா
மிதுலா சற்குணம்
சுதர்சன் நடராஜா
விஜித்தா நடராஜா
பெர்னாண்டோ மரஸ்ரன்
சதீனா பொன்னம்பலம்
கோபிதாசன் பொன்னம்பலம்
யோசலீன் சிங்கராஜா
சர்மினி விசுவரட்ணம்
ரஷ்மி அன்னலிங்கம்
அபீரன் தாமோதரம்பிள்ளை
அஜீர் தமோதரம்பிள்ளை
நிருஜா சிறிபாஸ்கரன்
சர்மிளா நவரட்ணம்
சுவிஸ்ரன் இராஜநாயகம்
ராகுலன் பத்மநாதன்
சிவலக்ஷன் சிவராஜசேகரம்
கஜலக்சி சிவராஜாசேகரம்
சர்மிலன் சுப்ரமணியம்
பஞ்சசீலன் பாலசிங்கம்
விஜி பாலசிங்கம்
காரத்திகா பாலசிங்கம்
தீபிகா கிருஷ்ணசாமி
தர்சனா விமலச்சந்திரன்
சிந்துஜன் சிதம்பரப்பிள்ளை
அருள்விழி சபாபதிப்பிள்ளை
ராகவி அமலதாசன்
எல்விஸ் சவேரியாபிள்ளை
ஜீவனா சவேரியாபிள்ளை
கஜந்தன் சுந்தரமூர்த்தி
பிரதீஸ். க
பிரபாகரன். சுந்தரலிங்கம்

## சிரி-சிந்தி!

**தமிழன்:** என்னிடம் சொந்த வீடு இருக்கு, சொந்தக் கார் இருக்கு, பெட்டி நிறைய நகை இருக்கு. பாங்கில் நல்ல பணம் இருக்கு...


**ஐரோப்பியன்:** எனக்கென்று சொந்த நாடு இருக்கு!

**தமிழன்:** !!!???...

-ரவி-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்களில் நிஜங்களைப் பார்ப்போமா?



நன்றி- "இளைஞன்" ஜேர்மனி.

## பசு



இது ஒரு பசு. இதற்கு:
ஒரு வாய் உண்டு
ஒரு வால் உண்டு
இரண்டு கண்கள் உண்டு
இரண்டு காதுகள் உண்டு
நான்கு கால்கள் உண்டு

பொ. சதீனா
வயது 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசல் புகையிரத நிலைய சுரங்கப்பாதையில்
அமைந்திருக்கும் ரவி கடை!

# S.P.JEWELLERY. TEXTILES & PROVISION

Bahnhof
4051 Basel
Swiss
Tel & Fax: 061/2720990
061/3823965, 079 3562278

தரமான 22
கரட் தங்கநகைகள்,
அழகான ரெடிமேட்
உடுப்புக்கள், உடன் மரக்கறி,
மீன் உணவு வகைகள், வீடியோ,
ஓடியோ கசற்றுக்கள், பழைய புதிய
பாடல்களைக்கொண்ட சீ.டி.க்கள்,
பத்திரிகைகள், சஞ்சிகைகள்
போன்றவற்றை ஒரே இடத்தில்
மலிவாகப்பெற்றுக்கொள்ள நீங்கள்
நாட வேண்டிய இடம்தான்
ரவி கடை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பின் சின்னம்
# சிக்கனத்தின் சிகரம்

# MONIKA ENTERPRISE

**பாசல்**
**நகரின் தரமிக்க**
**தங்க மாளிகைதான்**
**மொனிக்கா என்ரபிரைஸ்!**
**மங்கையர் கண்கவரும் அசல்**
**22 கரட்**
**தங்கநகைகளை**
**உங்கள்**
**விருப்பத்திற்கேற்ற**
**டிசைன்களில்**
**எம்மிடம்**
**பெற்றுக்**
**கொள்ளலாம்**



எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி! உங்களுக்குச் சகல நாடுகளுக்குமான உண்டியல் வசதியும் செய்து தரப்படும்.
(எமது நிறுவனம் அரச உத்தரவாதம் பெற்ற உண்டியல் சேவையைச் செய்கின்றது)

தொடர்புகளுக்கு:

**MONIKA GOLD HOUSE & GEM MERCHANTS**
**M.E. Sinnathurai**
**Elsaesser Strasse, 51**
**4056 Basel**
**Swiss**
**Tel: Fax: 061/ 322 44 50**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிகேதன்

## நடனாலயம்

**பாசல் - சுவிற்சர்லாந்து**





**புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

## பரதநாட்டியம்
## கதகளி ஆடல்
## கர்நாடக சங்கீதம்

**இக்கலைகள் யாவும் கற்பிப்பதில் தேர்ச்சியும், அனுபவமும் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.**
**எமது சிறார்களை எமது பண்பாடு, கலாச்சாரத்தில் வளர்த்திட எமது பண்பாட்டுக் கலைகளான நாட்டியம், சங்கீதம் என்பனவற்றை முறைப்படி பயில பாசல் மாநகரில் "கலாநிகேதன்" நடனாலயம்.**

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**Tel: 061/ 321 00 42**
**079/ 302 53 45**


# இதயத்து நன்றிகள்

**மா**ணவர்களின் ஆக்கங்களை வெளிக்கொணரும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இம்மலருக்கு காரணகர்த்தாவாக இருந்து அயராது உழைத்த ஆசிரியர். ஏ.ஜே.ஞானேந்திரன் அவர்களுக்கும், ஆண்டுக்கு ஆண்டு எந்தவித பிரதியுபகாரத்தையும் எதிர்பார்க்காது - ஒலி-ஒளி ஒழுங்குகள் செய்துதந்த குணா, மிருதங்க வித்துவான் சண்முகதாஸ் (பபா), "கீ போர்ட்" இசையமைப்பாளர் மகேஸ்வரன், வீடியோப் படப்பிடிப்பாளர் ராசய்யா சிவகுமார், கமெராப் படப்பிடிப்பாளர் ஜெயச்சந்திரன் மகேஸ்வரன், பொதுப்பணிகளில் உதவிபுரிந்த வினாசித்தம்பி, மகேந்திரன், ஆனந்தரான், - வாகன ஒழுங்குகள்



செய்துதந்த ஜெயா, அட்டைப்பட வடிவமைப்புக்கு உதவிய ஸ்ரீரங்கநாதன், மற்றும் இம்மலரை, (அட்டைப்படத்தை) அழகாக கணணியில் வடிவமைத்து தந்த "சிந்துநதி" (ஜேர்மனி) பதிப்பகத்திற்கும், "சிந்துநதி" பதிப்பகத்திற்காக அச்சிட்டுத்தந்த சார்னிக் (Sarnik) அவர்களுக்கும் மற்றும் பாடசாலை விழாக்களில் தமது சேவைகளை நல்மனதுடன் வழங்கிய அனைவருக்கும் எமது இதயத்து நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**பாசல் தமிழ்ப்பாடசாலை**
**நிர்வாகசபை.**

Printed by: SINTHUNATHY (Artist SEGAR) Germany, Tel: (0049) 0172-4189964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசல் நகரில் புதியதோர் நிறுவனம்!


# C.J.CHRICHANTH TRADING CENTER

*Elsaesser Str, 41*
*4056 Basel*
*Swiss.*



- இலங்கையிலிருந்து உடன் தருவிக்கப்பட்ட கடல் உணவு வகைகள்.
- மரக்கறி வகைகள், பழவகைகள்.
- தரமான வீடியோ பிரதிகள், ஓடியோ கசற்றுக்கள், சீ.டி.க்கள்
- மளிகைப் பொருட்கள்.
- வார மாத சஞ்சிகைகள்
- தொலைபேசி அட்டைகள்


அனைத்தையுமே தரமானதாகவும், குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள பாசலில் உள்ள ஒரே ஸ்தாபனம்




உரிமையாளர்:

**Christopher John Wiltor**

Tel & Fax: 061/3223921





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் முழுவதும் உங்களின் தேவைகளுக்கு எங்களிடம் சேவை!



# தமிழ்ச் சங்கம்

## பல்பொருள் அங்காடி

## Basel, Feldbergstrsse 100 ல்

உங்கள் அவசிய வீட்டுத்தேவைகளை
எங்கள் மூலம் நிறைவு செய்து கொள்ளுங்கள்.

**தினமும் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை**
**எமது ஸ்தாபனம் திறந்திருக்கும்.**

**விடுமுறை நாட்களிலும் பல்பொருள் அங்காடி திறந்தே இருக்கும்.**

மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், குளிர் பானங்கள், பால், இறைச்சி, முட்டை, பழவகைகள், கோவில் பூசைப்பொருட்கள், வாடகை வீடியோப் படங்கள், சீ.டி. ஓடியோ கசற்றுக்கள், பியர், விஸ்கி, வைன், மதுபான வகைகள், குழந்தைகள் பெரியோருக்கான உடுபுடவைகள், ஐரோப்பிய உணவுவகை பாண், பட்டர், சீஸ், சலாமி, ஸிங்கன்

வாருங்கள்! வந்தொருமுறை பாருங்கள்!
உங்கள் தேவையறிந்து சேவை செய்ய அழைக்கிறது

# தமிழ்ச் சங்கம்

**தரமான பொருள்!** **நிறைவான சேவை!!** **நியாய விலை!!!**

**தொடர்புகளுக்கு: எஸ். இராசையா.** Feldbergstr 100, Basel, Tel: 061 6931804

Printed by: (SINTHUNATHY) Germany, Tel: 0172 4189964 (24 Hours Services Call)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org